பக்கங்கள்:-22

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆனி 19 | புதன்கிழமை | 04.09.2024 | அதிர்வு 033

## தம்பிராசாவுக்கு விளக்கமறியல்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் – சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைத்தியர்களின் விடுதிக்குள் நுழைந்த சம்பவம் தொடர்பாக மூவர் கைது செய்யப்பட்டனர். 05



### தமிழ்க் கட்சிகள் என்ன முடிவை எடுத்தாலும்

# தமிழ் மக்கள் என் பக்கமே!

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு


"தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் ஏனைய ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு முன்னுரிமை வழங்கியுள்ளபோதும் இந்த நாட்டின் பெரும்பாலான தமிழ், முஸ்லிம் மக்களின் அமோக ஆதரவு எனக்கு இருக்கின்றது."

- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். 07

## சகல தமிழ்த் தேச அரச உத்தியோகத்தர்களும் தபால் மூல வாக்களிப்பைப் புறக்கணியுங்கள்

### கஜேந்திரன் எம்.பி. வேண்டுகோள்

ஜனாதிபதித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு இன்று புதன்கிழமை ஆரம்பமாகவுள்ள நிலையில் ஒட்டு மொத்த தமிழ்த் தேசத்து அரச உத்தியோகத்தர்களும் வாக்களிக்காது முழுமையாகப் புறக்கணிக்க வேண்டும் என்ற அழைப்பைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பாக நாங்கள் விடுக்கின்றோம் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் வலியுறுத்தினார். 06






எது நடக்கக் கூடும் என்று கோடி காட்டினேனோ அது நடந்து விட்டது.

மாகாண சபை தேர்தல் சட்டமூலம் நிறைவேறும் வரை தமிழரசு கட்சி புத்திசாலித்தனமாக நடந்திருக்க ஆலோசனைகள் இருந்தன. இரண்டு நாள் தாமதித்து இருந்தால், மாகாண சபைச் சட்டமூலத்தை வெற்றிகரமாக நகர்த்தி இருக்க முடியும். இனிப்பேசி பயனில்லை.

இனி செய்யக்கூடிய – செய்ய வேண்டிய – வாய்ப்பான – நகர்வு குறித்து இன்றைய ஆசிரியர் தலையங்கத்தில் கோடி காட்டப்பட்டுள்ளது. அதற்கு முயற்சிப்பதுதான் நல்லது.

சஜித்தை ஆதரிக்கும் முடிவைத் தமிழரசு கட்சி எடுத்த பின்னர், அன்று மாலையில் சஜித் பிரேமதாஸவைச் சந்தித்து 06

# சொல்பவற்றை சஜித் செய்தாக வேண்டும்!

## ரணிலைப் போல நடக்கக் கூடாது என நாடாளுமன்றில் சுமந்திரன் எச்சரிக்கை

(ந.லோகதயாளன்)

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு எமது தமிழ் மக்கள் வாக்களிப்பார்கள். ஆனால், அவர் நாடு முழுவதும் சென்று இப்போது சொல்லியிருக்கின்ற – உறுதி கொடுக்கின்ற – விடயங்களத் தவறாது நடைமுறைப் படுத்த வேண்டும். இல்லையென்றால் அது பின்னர் பார தூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என எச்சரிக்கின் றேன் எனத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப் பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்றைய தினம் மாகாணச் சபைச் சட்டம் எடுத்துக்கொள்ளப்படாமல் ஒக்டோபர் மாதத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டமை தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தொடர்ந்தும் உரையாற்று கையில் கூறியவை வருமாறு:–

ஜனாதிபதித் தேர்தலில் பிரதான எதிர்க் கட்சித் தலைவ ருக்கு நாம் (தமிழரசுக் கட்சியினர்) ஆதரவைக் கொடுக் கின்ற போதும் அவருக்கும் ஓர் எச்சரிக்கையைச் சொல்லி வைக்க விரும்புகின்றேன்.

எங்களோடு இணங்குகின்ற விடயங்களை முழுமையாக நிறைவேற்ற வேண்டும். இந்த ஒரு நடவடிக்கையின் (மாகா ணச் சபைச் சட்டத்தை எடுத்துக்கொள்ளாமல் ஒக்டோபர் மாதத்திற்கு ஒத்தி வைத்தமை மூலம்) தான் யார் எனபதை ரணில் திரும்பவும் மக்களிற்கு நிரூபித்திருக்கின்றார். வாய் மூலம் பலவிதமான வாக்குறுதிகள் கொடுப்பதும், அதைச் செய்வதைப் போல் காட்டுவதும், இறுதித் தறுவாயில் – இறுதிப் படியை – எடுக்காமல் விடுவதும் ரணில் விக்கிரமசிங்க வின் சுபாவம் என்பதனை இந்த தருணத்திலும் காண்பித் திருக்கின்றார்.

தனக்கு வாக்களிக்காமல் விடுகின்ற தீர்மானத்தை பிரதான தமிழ்க் கட்சி எடுத்திருக்கின்றதன் காரணமாக – தமிழ் மக்களை தண்டிக்க வேண்டும் என்று கருதி அவர் செயற்பட்டிருக்கின்றார்.

அரைகுறைத் தீர்வாக இருந்தாலும் கூட இருக்கின்ற மாகாண சபைகளை நடத்தவிடாமல் பண்ணுவதற்காக இப்படியான மிக மோசமான நடத்தையிலே ரணில் விக் கிரமசிங்க இன்றைக்கு இறங்கியிருக்கின்றார்.

அவருடைய இந்த நடத்தையே நாங்கள் கடந்த ஞாயிற் றுக்கிழமை இலங்கை தமிழ் அரசுக் கட்சியாக அவருக்க




(ரணிலிற்கு) ஆதரவளிப்பதில்லை என எடுத்த தீர்மானம் சரியானது என நிரூபணமாகின்றது.

இப்போது எதிர்க் கட்சித் தலைவருக்கு நாங்கள் ஆதரவு கொடுக்கின்றபோது அவருக்கும் இதனை நாங்கள் ஓர் எச்சரிக்கையாகச் சொல்லி வைக்க விரும்புகின்றேன். எங்களோடு இணங்குகின்ற விடயங்களை முழுமையாக நிறைவேற்ற வேண்டும். இல்லை என்று சொன்னால் இந்த நாடு அழிவுப் பாதைக்குள் செல்லும். அவர் கொடுத் திருக்கின்ற வாக்குறுதிகளோடு சென்ற தடவை எமது மக்கள் அவருக்கு பெரும்பான்மையாக வாககளித்திருந்தார்கள். ஆகையினாலே இந்தத் தடவையும் தமிழ் மக்கள் எதிர்க் கட்சித் தலைவருக்கு வாக்களிப்பார்கள். ஆனால் நாடு பூராக வும் சென்று அவர் சொல்லியிருக்கின்ற விடயங்களை அவர் நடைமுறைப்படுத்த வேண்டும். இல்லையென்றால் இது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்ற எச்சரிக் கையோடு நிறைவு செய்கின்றேன். – என்றார்.

# க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குரிய மீளாய்வு பெறுபேறுகள் வெளியாகின




2023 (2024) கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சையின் மீளாய்வு பெறுபேறுகள் வெளியாகியுள் ளன.

பரீட்சைகள் திணைக்களம் இதனைத் தெரிவித்துள் ளது.

இந்த பெறுபேறுகளை www.results.exams.gov.lk அல்லது www.doenets.lk என்ற இணை யத்தளத்தில் பார்வையிட முடியும் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது.





# நாடு நெருக்கடி நிலையை சந்திப்பதற்கு ரணில், மஹிந்த தரப்பினர்தான் பொறுப்பு

## அநுரகுமார திஸாநாயக்க தெரிவிப்பு

நாடு நெருக்கடி நிலையை சந்திப்பதற்கு ரணில் மற்றும் மஹிந்த தரப்பினரே பொறுப்பானவர்கள் எனத் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பதுளையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு, அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தாம் இல்லாவிட்டால் நாடு மீண்டும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கும் என ரணில் விக்கிரமசிங்க அச்சுறுத்தலை விடுக்கிறார்.

இதனையே கடந்த காலத்தில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் முன்வைத்திருந்தார். தாம் இல்லாவிட்டால் நாட்டிற்குப் பாதுகாப்பில்லை என்றார். அதற்கு அஞ்சி மக்கள் அவருக்கு வாக்களித்தனர்.

இறுதியில் நடந்தது என்ன? அதேபோன்றே, மக்கள் மத்தியில் போலியான வகையில் அச்சத்தை ரணில் விக்கிரமசிங்க உருவாக்கி வருகின்றார்.

தாம் இல்லாவிட்டால் சமையல் எரிவாயுவிற்குத் தட்டுப்பாடு ஏற்படும் எனவும் தெரிவிக்கிறார்.

வெடிக்கும் சமையல் எரிவாயுவை வழங்கியவர்களே இவ்வாறு போலியான கதையினை பரப்புகின்றனர்.”– என்றார்.














# தற்கொலைக்கு எதிரான விழிப்புணர்வுக்கான தொடர் சைக்கிளோட்டம் திருமலை வந்தது!

தற்கொலைகளைத் தடுக்கும் வகையில் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்ட தொடர் சைக்கிளோட்டம், திருகோணமலையை நேற்று செவ்வாய்க்கிழமை வந்தடைந்தது.

இத்தொடர் சைக்கிளோட்ட வீரர்கள் திருகோணமலை றோட்டரிக் கழக அங்கத்தவர்களால் வரவேற்கப்பட்டார்கள்.

தைரியம்,இரக்கம், பொறுப்பேற்றல் என்ற பெயரையுடைய, தன்னார்வ தொண்டர் நிறுவனம், றோட்டரிக் கழக அனுசரணையுடன் இந்நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளது.

இலங்கையில் நாளொன்றுக்கு தற்கொலை செய்பவர்களின் எண்ணிக்கை சராசரியாக 11பேர் ஆக உள்ளது. தற்கொலை முயற்சிகளை தடுப்பதுடன், மக்களின் உளவள நலனை மேம்படுத்தவும் தற்கொலை எண்ணத்துக்கு தூண்டப்படுபவர்களுக்கு உளவள ஆலோசனைகளை வழங்கி, அதிலிருந்து விடுவிப்பதற்கான வழி வகையினை ஏற்படுத்துவதற்குமாகவே இவ் விழிப்புணர்வூட்டல் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

சிசிசி 1333 (உஉஉ1333) என்னும் இலவச ஆலோசனை வழங்கும் தொலைபேசி இலக்கத்தை பொதுமக்கள் மத்தியில் அறிமுகப்படுத்துவதனை நோக்காக கொண்டு, இலங்கையின் 12 மாவட்டங்களை உள்ளடக்கியதாக தொடர் சைக்கிளோட்ட நிகழ்வு நடைபெற்று வருகின்றது. இத் தொடர் சைக்கிளோட்டமானது திருகோணமலைக்கு வந்தடைந்தது அவர்களுக்கு மதிய உணவு றோட்டரி இல்லத்தில் கொடுக்கப் பட்டது.

பின்னர் தற்கொலையின் தாக்கம் குறித்து மக்களை விழிப்பூட்டும் முகமாக நிகழ்ச்சி ஒன்றும் நடாத்தப்பட்டது. அத்துடன் தற்கொலை மனப்பாங்கை நீக்கக்கூடிய ஆலோசனைகள் 1333 என்ற தொலைபேசி இலக்கம் அடங்கிய கையேடுகள் பொது மக்களுக்கு விநியோகிக்கப் பட்டன.


















# பௌத்த, இந்து, கிறிஸ்தவ மதத்தலைவர்களை வவுனியாவில் சஜித்தின் கூட்டத்தில் காணோம்





(வவுனியா நிருபர்)

வவுனியாவில் இடம்பெற்ற ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் பிரசாரக் கூட்டத்தில் பௌத்த, இந்து, கிறிஸ்தவ மத குருமார் புறக்கணிக்கப்பட்டனரா என்ற சர்ச்சை எழுந்துள்ளது.

ஐக்கிய மக்கள் கூட்டணியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் நேற்று வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

கூட்டத்தின் பிரதான மேடையில் மதத்தலைவர்களுக்கும் இடம் ஒதுக்கப்பட்டிருந்தது.

இந்தப் பொதுக் கூட்டத்தில் மூவினங்களையும் சேர்ந்த நான்கு மதங்களையும் சேர்ந்த மக்கள் கலந்து கொண்ட போதும் பௌத்த மதகுரு, இந்து மதகுரு, கிறிஸ்தவ மதகுரு ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. அவர்கள் எவரும் பிரதான மேடையில் காணப்படவில்லை. இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்த 6 மௌலவிகள் வரவழைக்கப்பட்டு அவர்கள் மதத்தலைவர்கள் அமரும் இடத்தில் இருந்தனர். ஒரு மௌலவி உரையாற்றியும் இருந்தார்.

ஆனால் ஏனைய மதத் தலைவர்கள் அழைக்கப்படவில்லை என அங்கு கலந்து கொண்டு ஏனைய மதங்களைச் சேர்ந்த மக்கள் கவலை வெளியிட்டனர்.

## தம்பிராசாவுக்கு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர்களில் ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இருவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

சமூக வலைத்தளங்களில் போலித் தகவல்களைப் பரப்பி தவறாக வழிநடத்தினார் என்ற குற்றச்சாட்டில் கைதான அடக்குமுறைக்கு எதிரான ஜனநாயக அமைப்பின் தலைவர் மு.தம்பிராசாவை எதிர்வரும் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் முன்னாள் பதில் வைத்திய அத்தியட்சகர் இராமநாதன் அர்ச்சுனா வைத்தியசாலை விடுதிக்குள் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார் என்று தெரிவித்து நேற்றுமுன்தினம் இரவு பொலிஸாருக்கு முறைப்பாடு அளிக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு விரைந்த சாவகச்சேரி பொலிஸார் வைத்தியசாலை விடுதி அறைக்கு வெளியே வைத்தியரை அழைத்தபோதும், வைத்தியர் வெளியே வராததால் சந்தேகமடைந்த பொலிஸார் விடுதி அறையை உடைத்து உள்ளே சென்றனர்.

இந்நிலையில் வைத்தியர் அர்ச்சுனா இராமநாதன் அங்கு சென்ற பொலிஸாருடன் தர்க்கத்தில் ஈடுபட்டார்.

இதனையடுத்து சம்பவ இடத்தில் நின்ற மு.தம்பிராசாவையும், காணொளியை எடுக்க முயன்ற இருவரையும் பொலிஸார் கைது செய்தனர்.

சாவகச்சேரி பொலிஸார் விசாரணைக்கு பின்னர் மூவரையும் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று முற்படுத்தினர்.

விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான் அடக்குமுறைக்கு எதிரான ஜனநாயக அமைப்பின் தலைவர் மு.தம்பிராசாவை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டதுடன் ஏனைய இருவரையும் பிணையில் விடுவித்து உத்தரவிட்டார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பேசும் வாய்ப்பு கிடைத்திருந்தது.

இந்த முடிவை – சஜித்தை ஆதரிக்கும் தீர்மானத்தை – தமிழரசுக் கட்சி எடுத்து, பகிரங்கமாக அறிவித்த பின்னர், அடுத்த இரண்டு நாள்களில் – அதாவது நேற்று மாகாண சபைகள் சட்டமூலம் நாடாளுமன்றுக்கு வர இருப்பதால் அதனை குழப்புவதற்கு ரணில் முயலுவார் என்ற என் அனுமானத்தை சஜித்திடம் கூறினேன்.

இந்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் நிறைவேறுவதை தடுப்பதற்காக திங்கட்கிழமை இரண்டாம் தேதி இரவு முதல் நாடாளுமன்றத்தை இடை நிறுத்தும் (Prorogue பண்ணும்) முடிவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுக்கலாம் என்ற என் எதிர்பார்ப்பைக் குறிப்பிட்டேன்.

சஜித் "அப்படி செய்தால் செய்யட்டும். எங்களது புதிய அரசில் இந்தச் சட்டத்தை உடன் கொண்டு வந்து நிறைவேற்றுவோம். யோசிக்காதீர்கள்!" என்றார் அவர்.

அவருக்குப் பதில் கூற எனக்கு வாயில் வந்தது. ஆயினும் நான் நிறுத்திக் கொண்டேன்.

'நல்லது. நீங்கள் அப்படிச் செய்யலாம். ஆனால் பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டு, தேர்தல் நடந்து, புதிய அரசு உருவாகி, அதன்பின்னர் இந்தச் சட்டத்தை முதலில் இருந்து மீளக் கொண்டு வந்து நிறைவேற்றி, அதன் பின்பு மாகாண சபை தேர்தலை அறிவித்து, அந்தத் தேர்தலை நடத்தி முடிப்பதற்கு இன்னும் ஒரு வருடம் வரை காத்திருக்க வேண்டி நேரும்' என்று கூற முற்பட்டேன். ஆயினும் கூறவில்லை. அப்படி அவருடன் விவாதம் நடத்த வேண்டிய தேவை எனக்கு இருக்கவில்லை.

அதனால் அவர் கூறியவற்றை கேட்டு விளங்கிக் கொண்டு அடக்கிக் கொண்டேன்.

சஜித்தை ஆதரிக்கும் முடிவை தமிழரசு அவசரப்பட்டு வெளியிட்டமையால் தமிழினத்திற்கு மாகாண சபை தேர்தலை மீண்டும் நடத்த கேட்பதற்கான கிடைத்த அருமையான வாய்ப்பைத் தாமதிக்கும் சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது.

\+ + +

இலங்கையில் யுத்தத்தின் போது சர்வதேசக் குற்றச் செயல்களில் ஈடுபட்டனர் எனக் கூறப்படும் குற்றவாளிகள் குறித்துப் புலனாய்வு செய்து, விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் உறுப்பு நாடுகளுக்கு ஐக்கிய நாடுகள் சபை கோரிக்கை விடுத்துள்ளது.

ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 57ஆவது கூட்டத் தொடருக்கு முன்னதாக வெளியிடப்பட்ட இலங்கை தொடர்பான அறிக்கையில் மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிகர் அலுவலகம் இக்கோரிக்கையை முன்வைத்திருக்கின்றது.

மனித உரிமைகள் பேரவை மற்றும் உறுப்பு நாடுகள் இவ்விடயத்தில் குற்றவாளிகள் எனக் கருதப்படுவோரை புலனாய்வு செய்து, விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு அங்கத்துவ நாடுகளை அந்த அறிக்கை கோருகின்றது

இலங்கையில் பொறுப்புக்கூறலை முன்னெடுப்பதற்கு ஏனைய சர்வதேச சட்ட வழிவகைகளைப் பயன்படுத்துவதையும் பரிசீலிக்குமாறு உறுப்பு நாடுகளை இந்த அறிக்கை வலியுறுத்தியுள்ளதுள்ளமை குறிப்பிடத் தக்கது.

## சகல தமிழ்த் தேச அரச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

"இது வெறுமனே தமிழ் மக்களின் நலன்களுக்கானது மாத்திரமல்ல. மாறாக ஒட்டுமொத்த இலங்கைத்தீவு மக்களினதும் நலன்களுக்கானது. ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிப்பதன் மூலம் ஒற்றையாட்சி அரசமைப்பை நீக்குவதற்கான அழுத்தத்தை ஏற்படுத்தவும் சமஷ்டி அரசமைப்பைக் கொண்டுவரவும் முடியும் என்பதில் நாங்கள் நம்பிக்கையாக இருக்கின்றோம்." – என்றும் அவர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற விவாத்த்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தமிழ் மக்களின் வாக்குகளைக் குறிவைத்து பிரதான வேட்பாளர்கள் மிகத் தீவிரமான பிரசாரங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் தற்போதைய சூழ்நிலையில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நிலைப்பாட்டை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் பதிவு செய்து கொள்ள விரும்புகின்றேன். கடந்த 2020 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் நானும் இந்த நாடாளுமன்றத்திற்கு வந்த நாளிலிருந்து 75 வருடங்களாகப் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்த அவையிலுள்ள மூத்த அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைவர்கள் ஆகியோர் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென நாங்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தோம். எனினும், யாரும் இதனைக் கருத்திலெடுக்கவில்லை.

இதன் காரணமாக 2022ஆம் ஆண்டில் இந்த நாட்டில் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு ஆட்சியிலிருந்த ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவுக்கு எதிராகவும் அவரது அரசுக்கு எதிராகவும் மக்கள் வீதிக்கு இறங்கிப் போராடினார்கள். அதன் விளைவாக அவர் ஜனாதிபதிப் பதவியை விட்டு வெளியேறினார். இதன்பின்னர் நாட்டின் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்றுக் கொண்டார். அவர் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் நாடாளுமன்றத்தில் தமிழ், முஸ்லிம் சமூகங்களை நோக்கி தான் இனப்பிரச்சினையைத் தீர்க்கப் போவதாகவும் அதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் அழைப்பு விடுத்திருந்தார்.

குறிப்பாக எங்கள் கட்சித் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் பெயரைக் குறிப்பிட்டுத் தான் இனப்பிரச்சினையைத் தீர்க்கப் போவதாகவும் நீங்கள் அரைவாசித் தூரம் ஒத்துழைத்தால் கூட இனப்பிரச்சினையைத் தீர்த்து விடுவதாகக் கூறியிருந்தார். அதே நேரம் இந்த நாட்டின் இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமாகவிருந்தால் 75 வருடங்களாகத் தமிழ் – சிங்கள இனங்களுக்கிடையில் பகைமையை வளர்த்து ஒரு இன அழிப்பு யுத்தத்துக்கு வித்திட்ட இந்த நாட்டின் ஒற்றையாட்சி அரசமைப்பு ஊழலுக்குக் காரணமாகவிருந்த ஒற்றையாட்சி அரசமைப்பு யுத்தம் நிறைவடைந்து 13 வருடங்களின் பின்னர் இந்த நாட்டின் பொருளாதாரம் பாதாளத்திற்குள் விழுவதற்குக் காரணமாகவிருந்த ஒற்றையாட்சி அரசமைப்பு ஒரு தோல்வியடைந்த அரசமைப்பு. இந்த அரசமைப்பை நீக்கி ஒரு சமஷ்டி அரசமைப்பைக் கொண்டு வர வேண்டும். தமிழ் மக்களின் தேசத்தை அங்கீகரிக்கும் வகையிலும், இனங்களைச் சமத்துவமாக வழிநடத்தக் கூடிய வகையிலும் ஒரு சமஷ்டி அரசமைப்பைக் கொண்டுவருவதன் மூலம்தான் இனங்களுக்கிடையில் ஒரு சமத்துவத்தையும் வீழ்ந்திருக்கும் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பக் கூடிய முதல் அடியை எடுத்து வைக்கடியுமென்ற உண்மையை மக்களுக்கு எடுத்துச் சொல்லுங்கள். சமஷ்டி அரசமைப்பு அடிப்படையில் நாட்டின் இனப்பிரச்சினையைத் தீர்த்துப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு நீங்கள் முன்னெடுக்கும் முயற்சிகளுக்கு நாங்கள் எப்போதும் ஒத்துழைப்பு வழங்கத் தயார் என்ற தெளிவான செய்தியை எங்கள் கட்சித் தலைவர் முன்வைத்திருந்தார்.

ஆனாலும், அதற்குப் பின்னர் ஜனாதிபதி தமிழ்க் கட்சிகளையும் முஸ்லிம் கட்சிகளையும் அழைத்து இனப் பிரச்சினைத் தீர்வு என்ற பெயரில் பல கூட்டங்களையும் பேச்சுவார்த்தைகளையும் நடத்தி அதன் மூலமாகத்தான் எல்லா இனச் சமூகங்களையும் அரவணைத்துச் செல்கின்ற ஒரு தலைவர் என்ற தோற்றப்பட்டை ஏற்படுத்தி, சர்வதேச சமூகத்திடமிருந்து, குறிப்பாகச் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து நிதி உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகளில் மாத்திரம்தான் தொடர்ச்சியாக ஈடுபட்டிருந்தாரே தவிர எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை அவர் எடுத்திருக்கவில்லை. இந்நிலையில் வடக்கு– கிழக்கில் சிங்கள மயமாக்கல் மற்றும் பௌத்த மயமாக்கலைத் தீவிரப்படுத்தும் நடவடிக்கையிலும் ரணில் அரசாங்கம் தீவிரமாக ஈடுபட்டு வந்தது.

அதேவேளை தற்போது ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சஜித் பிரேமதாஸ மற்றும் அநுரகுமார திஸாநாயக்க ஆகியவர்களிடமும் ஒற்றையாட்சி அரசமைப்பு ஒழிக்கப்பட வேண்டும். சமஷ்டி அரசமைப்புக் கொண்டு வரப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளைத் தெளிவாக முன்வைத்திருந்த போதிலும் எங்கள் கோரிக்கைகளை எவரும் உள்வாங்கியதாக இல்லை.

இந்தநிலையில்தான் தற்போதைய ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்படுவதற்கு முன்னதாகவே கஜேந்திரகுமார் தலைமையிலான எங்கள் கட்சி இந்த நாட்டின் ஒற்றையாட்சி அரசமைப்பு ஒழிக்கப்பட்டு சமஷ்டி அரசமைப்புக் கொண்டு வரப்படும் என்ற உறுதிமொழியை வெளிப்படுத்தும் வரையும், தமிழினம் மீதான இன அழிப்புக்கும், தொடர்ச்சியான கட்டமைப்புச் சார் இன அழிப்புக்கும் காரணமாகவும் இருக்கின்ற ஒற்றையாட்சி அரசமைப்பை நிராகரிக்கும் வகையில் ஜனாதிபதித் தேர்தலைத் தமிழ் மக்கள் புறக்கணிக்க வேண்டுமென்ற முடிவை நாங்கள் எடுத்திருந்தோம். முன்கூட்டியே இவ்வாறான முடிவை நாங்கள் எடுத்திருந்தமையால் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஒற்றையாட்சி அரசமைப்பு முறையை நீக்கிச் ஒரு சமஷ்டி அடிப்படையிலான அரசமைப்பைக் கொண்டு வருவதற்கான அறிவிப்பை வெளியிட வேண்டுமென நாம் எதிர்பார்த்திருந்தோம். அந்த அழுத்தங்களையும் நாங்கள்

07 ▶

## சகல தமிழ்த் தேச அரச...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

ஏற்படுத்திக் கொண்டேயிருந்தோம். மக்கள் மத்தியில் துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்கின்ற செயற்பாடுகளையும் தீவிரமாக முன்னெடுத்திருந்தோம்.

ஆனாலும் கடந்த மாதம்-29 ஆம் திகதி பிரதான வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் வெளியிடப்பட்டுள்ளன. புதிய மொந்தையில் பழைய கள்ளு என்பது போல 75 வருட காலமாக இந்த நாட்டின் தோல்விக்குக் காரணமான அதே ஒற்றையாட்சி அரசமைப்பையும் அதே பௌத்த மதம் அரச மதம் என்பதையும் பேணிப் பாதுகாக்கும் நிலைப்பாடுகளுடன் தான் தேர்தல் விஞ்ஞாபனங்கள் வெளிவந்திருக்கின்றன.

எமது கோரிக்கைகள் மூன்று பிரதான வேட்பாளர்களாலும் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளன. இவற்றைக் கருத்தில்கொண்டு ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிப்பது என்ற உறுதியான நிலைப்பாட்டுடன் மக்கள் மட்டத்தில் கருத்துருவாக்கங்களை நாங்கள் தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகின்றோம். நாளை (இன்று) புதன்கிழமை தபால் மூல வாக்களிப்பு ஆரம்பமாகவுள்ள நிலையில் ஒட்டுமொத்த தமிழ்த் தேசத்து அரச உத்தியோகத்தர்களும் இந்த ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்க வேண்டுமென அழைப்பு விடுக்கின்றோம்." - என்றார்.

## தமிழ் மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொழும்பு ஷங்கிரிலா ஹோட்டலில் தொழில் வல்லுநர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற விசேட நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கையின் சகல துறைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் பெருமளவிலான அறிஞர்கள், தொழில் வல்லுநர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்றனர். ஜனாதிபதிக்கு நேரடியாகத் தமது கேள்விகளை முன்வைக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டமையும் விசேட அம்சமாகும்.

இங்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தொழில் வல்லுநர்களுடனான சந்திப்பில் ஈடுபட்டதுடன், தன்னிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்குச் சாதகமான பதில்களை வழங்கினார்.

மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

"தற்போது, சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, சீன எக்சிம் வங்கி மற்றும் 17 நாடுகளுடன் கடன் நிலைத்தன்மை, கடன் நிவாரணம் மற்றும் 2032 வரையிலான முன்னோக்கி செல்லும் வழிகள் குறித்து உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் குழுவுடன் உடன்பாட்டை எட்டியுள்ளோம்.

இந்தப் பாதையில் தொடர்ந்து செல்லப் போகிறோமா அல்லது மாற்றப் போகிறோமா என்பதுதான் இப்போதைய கேள்வி. அரசின் வருவாய் மற்றும் செலவினங்களின் தற்போதைய அளவுகோல்களை மாற்ற முடியாது. வரித் திருத்தங்கள் செய்யப்படலாம் என்றாலும், அதற்கு முழு அளவுகோல்களைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

மாற்று வருமான வழிகளை முன்வைக்காமல் வரிகளைக் குறைத்து, அரச வருவாயைக் குறைத்து, நலன்புரி நடவடிக்கைகளின் மூலம் அரச செலவினங்களை அதிகரிக்க ஏனைய கட்சிகள் பரிந்துரைக்கின்றன. 2019 இல் வரி குறைப்பு மற்றும் அதிகப்படியான சலுகைகள் காரணமாக வருமானம் குறைந்தது. இதனாலேயே 2022 இல் பொருளாதார சிக்கல்கள் எழுந்தன. கடந்த காலத்தில் செய்த தவறுகளை மீண்டும் செய்ய வேண்டுமா என்று வினவ விரும்புகிறோம்.

எனவே, நாம் இப்போது ஒரு முடிவை எடுக்க வேண்டும். கொள்கை விவரங்களைப் பற்றி நான் பேசப் போவதில்லை. அடுத்த ஆண்டு வரை சர்வதேச நாணய நிதியத்தில் இருந்து 3 பில்லியன் டொலர்களைப் பெற இருக்கிறோம்.

2040 - 2042 வரை கடன் திருப்பிச் செலுத்துவதற்கான அவகாசத்துடன் கூடிய ஒப்பந்தமும் உள்ளது. அதை இழக்க நாம் தயாரா? நம் நாட்டிற்கு நடைமுறைச் சாத்தியமற்ற மாற்றம் தேவையில்லை. இந்த நெருக்கடியைச் சமாளித்து, 2042 இற்குள் ஸ்திரத்தன்மையை அடைய முடியும். ஆனால், நாம் விரைவில் ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரமாக மாறவில்லை என்றால், 2035 - 2040 இல் நாம் தொடர்ந்து கடன் வாங்கும்போது மற்றொரு நெருக்கடி ஏற்படலாம்.

எவ்வாறாயினும், போட்டித்தன்மை வாய்ந்த ஏற்றுமதி சார்ந்த, டிஜிட்டல் மற்றும் பசுமைப் பொருளாதாரமாக மாறுவதன் மூலம், தன்னிறைவான பொருளாதார மாற்றத்தை நோக்கி நாம் செல்ல முடியும். எங்களிடம் நிலம் போன்ற கணிசமான சொத்துக்கள் உள்ளன.

இந்த நூற்றாண்டின் நடுப்பகுதியில், உலக மக்கள் தொகை சுமார் 2 பில்லியன்களாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தச் சந்தைக்குத் தேவையான உணவளிக்க நமது விவசாயத்தை நவீனப்படுத்த வேண்டும். இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை 2.5 மில்லியனில் இருந்து 5 மில்லியனாக உயர்த்த வேண்டும்.

சுகாதாரம், கல்வி மற்றும் சமூக நலன்புரி ஆகிய துறைகளில் தற்போதுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதன் மூலம் இதை 10 வீதமாகக் குறைக்க நாங்கள் உறுதி பூண்டுள்ளோம். தோட்டத்தில் தற்போதுள்ள பாரம்பரிய விவசாயத்திற்கு பதிலாக விவசாய வணிகங்களை உருவாக்கவும் நாங்கள் எதிர்பார்க்கின்றோம். தற்போது லயன் அறைகளில் வசிப்பவர்களுக்கு நில உரிமை வழங்கவுள்ளோம்.

ஊழியர்களின் சேமலாபநிதி மற்றும் நம்பிக்கை நிதி ஆகியவற்றின் பணத்தை, பத்திரங்கள் மற்றும் கடனீட்டுப் பத்திரங்களில் முதலீடு செய்வதற்குப் பதிலாக, அதற்கான முதலீட்டு வாய்ப்புகள் குறித்து ஆராய்கின்றோம். தொழிற் சங்கங்களையும் முதலாளிகளிகளையும் இந்த செயல்பாட்டில் இணைக்க எதிர்பார்க்கிறோம்.

பெரும்பான்மையான மக்கள் தொகையில் குறைவான பிரதிநிதித்துவம் கொண்ட பெண்களின் நலனுக்காக பல விடயங்களை மேற்கொள்ள வேண்டும். அடுத்த சில ஆண்டுகளில் அரசு மற்றும் தனியார் துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் பெண்களுக்கு அதிகாரமளிக்கும் சட்டத்தை அமுல்படுத்தியுள்ளோம்.

சாதி, இனம் போன்று நீடித்து காணப்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான ஆணைக்குழுவொன்று தொடர்பிலும் கவனம் செலுத்தியிருக்கிறோம். இனம், சாதி, மதம் வேறுபாடின்றி அனைவரையும் பாதித்த பொருளாதார நெருக்கடிகள் குறித்து கருத்தில் கொள்ளப்படும் தேர்தல் நடைமுறை காணகிடைத்துள்ளதையிட்டு ஜனாதிபதி என்ற வகையில் நான் பெருமையடைகிறேன்.

இந்த சூழ்நிலை ஒரு நாடாக ஒன்றிணைவதற்கும், தற்போதுள்ள சமூக ஏற்றத்தாழ்வுகளின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் வாய்ப்பளிக்கும். குழந்தை பராமரிப்பு மற்றும் குடும்ப வன்முறை போன்ற பிரச்சினைகளுக்கும் தீர்வு காண வேண்டியுள்ளது. ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திலும் பெண்கள் மற்றும் சிறுவர்கள் பிரிவு இருந்தாலும், அதற்குள் மேலும் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

அதேபோல் நமது அரசியல் முறையிலும் மாற்றம் தேவைப்படுகின்றது. பொருளாதாரச் சரிவு அரசியல் முறையினையும் பாதித்துள்ளது. மற்றைய கட்சிகள் பழைய பொருளாதார கொள்கைகள் மீதே தங்கியுள்ளன. அது இறந்தவர்களை உயிர்ப்பிக்கும் முயற்சியாகும். அவ்வாறான செயற்பாடுகளை நம்பியிருக்க முடியாது.

அரசியல் கட்சிகள் எடுக்கும் தீர்மானங்களை நீதிமன்றம் வரையில் கொண்டு செல்லும் கலாசாரத்திற்கு மாறாக அனைத்து அரசியல் கட்சிகளும் ஒரே சட்ட வரையறைக்குள் செயற்படும் வகையில் ஜேர்மனி போன்ற ஐரோப்பிய நாடுகளில் செயற்படுத்தப்படும் நடைமுறையை உருவாக்க வேண்டும்.

ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளையும் எடுப்பது அவசியம். சிலர் ஊழல், மோசடி தொடர்பான 400 கோப்புகள் பற்றி பேசுகின்றனர். அவற்றில் 15 பேர் மட்டுமே சட்ட நடவடிக்கை எடுக்க கூடியவையாகும். எனவே, பேசிக்கொண்டிருப்பதை விடுத்து அதற்கான பயனுள்ள நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது அவசியம்.

நாம் ஆட்சிக்கு வந்த பிறகு அதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவை கோரினோம். ஊழல் தடுப்புச் சட்டம், குற்றச் செயல்கள் தொடர்பான சட்டம் போன்ற புதிய சட்டங்களை உள்ளடக்கிய ஊழல் எதிர்ப்பு நிகழ்ச்சி நிரலை நாங்கள் செயற்படுத்தி வருகின்றோம்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்துக்குப் பொறுப்புக்கூற வேண்டும். அதற்காக, இங்கிலாந்தைப் போல நாடாளுமன்றத் தரநிலை சட்டத்தில் திருத்தங்களை செய்ய எதிர்பார்க்கின்றோம். அதனால் பொருளாதாரத்தை போன்றே அரசியல், சமூக கட்டமைப்புக்களும் மாற்றத்துக்கு உள்ளாக வேண்டும்.

இந்த விரிவான மாற்றம் இளையோருக்கு ஒளிமயமான மற்றும் நிலையான எதிர்காலத்தை உருவாக்கும். 1991இல் வியட்நாம் தொழில் அமைச்சருடன் வெளிநாட்டு முதலீடுகள் குறித்து உரையாடியது நினைவுக்கு வருகின்றது. நாம் விரைவில் மாற்றத்தை எட்டாத பட்சத்தில் மீண்டும் அவரிடம் பேசி ஆலோசனை கேட்க வேண்டிய நிலைமை உருவாகும். எனவே, செப்டெம்பர் 21ஆம் திகதி இந்த விடயங்களை நினைவில் கொள்ளுங்கள்." - என்றார்.




# அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் யாழ் கிளையின் ஏற்பாட்டில் கவனவீர்ப்பு

நோயாளிகளுக்கு ஏற்பட்ட மருந்துப் பற்றாக்குறையை அம்பலப்படுத்தி குரல் எழுப்பிய தொழிற்சங்க தலைவர்களுக்கு எதிராக அடக்குமுறை பிரயோகிக்கப்படுகின்றது. அதை உடனடியாக நிறுத்தக் கோரி யாழில் கவன வீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் யாழ் கிளையின் ஏற்பாட்டில் யாழ் போதனா வைத்திய சாலையில் நேற்று செவ்வாய்க்கிழமை மதியம் இப்போராட்டம் நடைபெற்றது.

மருந்து பற்றாக்குறை தொடர்பில் குரல் எழுப்பிய தொழிற்சங்க தலைவர்களுக்கு எதிராக அரசாங்கம் அடக்கு முறைகளைப் பிரயோகிக்க மாட்டாது என உத்தரவாதம் வழங்கிய நிலையில் அத்தகைய அடக்குமுறைகள் அல்லது அச்சுறுத்தல்களை ஏற்படுத்துகிற திட்டமிட்ட செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு உள்ளன.

ஆகையினால் இத்தகைய அடக்குமுறைகளை நிறுத்த கோரி நாடாளாவிய ரீதியில் உள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் போராட்டத்தை முன்னெடுத்திருந்ததாக அரச மருத்துவ சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.





# முப்படையினருக்கும் அடிப்படை சம்பளம் அதிகரிப்பு

2025 ஜனவரி 01 முதல் அரச சேவையின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை உயர்த்துவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு அறிக்கையின்படி, முப்படைகளிலும் பணியாற்றும் உறுப்பினர்களின் அடிப்படை சம்பளமும் அதிகரிக்கப்படவுள்ளது.

இதன்படி முப்படைகளின் தரம் ஐஐஐ நிலை சாதாரண சிப்பாய்களினதும் அடிப்படை சம்பளம் 10,660 ரூபாவினாலும், தரம் II க்கு 10,960 ரூபாவினாலும் தரம் I இற்கு 11,260 ரூபாவினாலும் அதிகரிக்கப்படவுள்ளது.

லான்ஸ் கோப்ரல்ஃசார்ஜென்ட்ஃ ஏயர்மேன் பதவி நிலைகளின் தரம் III க்கு 11,560 ரூபாவினாலும் தரம் IIக்கு 11,860 ரூபாவினாலும் தரம் I க்கு 12,160 ரூபாவினாலும் அடிப்படை சம்பள அதிகரிப்பு வழங்கப்படும். அதன் விசேட தரச் சேவைக்கு அடிப்படை சம்பளம் 12,460 ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளது.

கோப்ரல் / நாயக நெவி / கோப்ரல் பதவிகளில் தரம் III க்கு 12,460 ரூபாவினாலும் தரம் II க்கு 12,760 ரூபாவினாலும் தரம் ஒன்றுக்கு 13,130 ரூபாவினாலும் அதன் விசேட தர சேவைக்கு அடிப்படைச் சம்பளம் 13,500 ரூபாவினாலும் அதிகரிக்கப்படவுள்ளது.

சார்ஜென்ட் / சாதாரண நிலை அதிகாரி / சார்ஜென்ட் பதவிகளில் தரம் III க்கு 13,500 ரூபாவினாலும், தரம் II க்கு 13,870 ரூபாவினாலும், தரம் ஐ க்கு 14,240 ரூபாவினாலும் அதன் விசேட தர சேவைக்கு 14,610 ரூபாவினாலும் அடிப்படைச் சம்பளம் அதிகரிக்கப்படவுள்ளது.

ஸ்டாப் சார்ஜென்ட்/ சாதாரண அதிகாரி / பதவி நிலை சார்ஜென்ட் ஆகிய பதவிகளின் தரம் III க்கு 14,610 ரூபாவினாலும் தரம் IIக்கு 14,240 ரூபாவினாலும் தரம் I க்கு 15,105 ரூபாவினாலும் அதன் விசேட தர சேவைக்கு 15,600 ரூபாவினாலும் சம்பளம் அதிகரிக்கப்படவுள்ளது.

அதிகார ஆணையிடும் அதிகாரி II / தலைமை அதிகார அதிகாரி / ஆணையிடும் அதிகாரி பதவிகளின் தரம் III க்கு 16,095 ரூபாவினாலும், தரம் II க்கு 16,590 ரூபாவினாலும் தரம் ஐ க்கு 17,085 ரூபாவினாலும் அதன் விசேட தர சேவைக்கு 17,580 ரூபாவினாலும் அடிப்படை சம்பளம் அதிகரிக்கப்படவுள்ளது.

ஆணையிடப்பட்டும் அதிகாரி I / இடைநிலை அதிகாரிகள் /தலைமை தலைமை பதவிகளின், தரம் III க்கு 19,725 ரூபாவினாலும், தரம் ஐஐ க்கு 20,385 ரூபாவினாலும் தரம் I க்கு 21,045 ரூபாவினாலும் அதன் விசேட தர சேவைக்கு அடிப்படை சம்பளம் 21,705 ரூபாவினாலும் அதிகரிக்கப்படவுள்ளது.

கெடட் அதிகாரிகளின் அடிப்படை சம்பளம் 13,500 ரூபாவினாலும், இடைநிலை அதிகாரிகளின் அடிப்படைச் சம்பளம் 13,870 ரூபாவினாலும் 2 ஆவது லெப்டினன்ட் (கெடட்) / ப்ளைட் அதிகாரி (கெடட்) பதவிகளின் அடிப்படை சம்பளம் 19,725 ரூபாவினாலும் அதிகரிக்கப்படவுள்ளது.

2ஆவது லெப்டினன்ட் (கெடட் அல்லாதவர்) / ப்ளைட் அதிகாரி (கெடட் அல்லாதவர்) பதவிகளின் அடிப்படை சம்பளம் 23,025 ரூபாவினால் அதிகரிக்கப்படும்.

லெப்டினன்ட் / உப லெப்டினன்ட் / ப்ளைட் அதிகாரி பதவிகளின் அடிப்படை சம்பளம் 28,855 ரூபாவினாலும் எக்யூப்மென்ட் கண்ட்ரோலர் பதவிக்கான அடிப்படை சம்பளம் 30,220 ரூபாவினாலும் கெப்டன் / லெப்டினன்ட் / ப்ளைட் லெப்டினன்ட் பதவிகளுக்கான அடிப்படை சம்பளம் 37,045 ரூபாவினாலும் அதிகரிக்கப்படும்.

மேஜர் / லெப்டினன்ட் கொமாண்டர் / ஸ்கொட்ரன் லீடர் பதவிக்கான அடிப்படை சம்பளம் 42,505 ரூபாவினால் அதிகரிக்கப்படும்.

லெப்டினன்ட் கேர்ணல் / கொமாண்டர் / விங் கொமாண்டர் பதவிக்கான அடிப்படை சமபளம் 44,175 ரூபாவினால் அதிகரிக்கப்படும்.

கேணல்/ கெப்டன் / குரூப் கெப்டன் பதவிக்கான அடிப்படை சம்பளம் 58,095 ரூபாவினால் அதிகரித்துள்ளது.

பிரிகேடியர் / கொமாண்டர் / எயார் கொமாண்டர் பதவிகளுக்கு அடிப்படை சம்பளம் 62,555 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேஜர் ஜெனரல் / ரியர் அட்மிரல் / எயார் வைஸ் மார்ஷல் பதவிகளுக்கான அடிப்படை சம்பளமம் 71,000 ரூபாவினால் அதிகரிக்கப்படும்.

லெப்டினன்ட் ஜெனரல் ஃ வைஸ் அட்மிரல் ஃ எயார் மார்ஷல் பதவிக்கான அடிப்படை சம்பளம் 76,300 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஜெனரல் / அட்மிரல் / எயார் ஷீப் மார்ஷல் பதவிக்கான அடிப்படை சம்பளம் 84,700 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# தமிழரசுக்குச் சமர்ப்பணம்

தனது நரிப் புத்தியை காட்டிவிட்டார் ரணில் விக்கிரமசிங்க. நேற்று நாடாளு மன்றத்தில் மாகாண சபைத் தேர்தல் சட்ட மூலம் மீதான மூன்றாவது வாசிப்பு நிறைவேற்றத்திற்கு ஒரு ஐந்து அல்லது பத்து நிமிட நேரம் இடம் அளித்திருந் தால் மாகாண சபைத் தேர்தல் சட்டத்தை நிறைவேற்றி இருக்க முடியும். அந்தத் தேர்தலுக்கும் வாய்ப்புக் கிட்டியிருக்கும்.

தன்னை ஆதரிக்கும் முடிவை தமிழரசு எடுக்காதமையினால் கடைசிக் கட்டத் தில் காலை வாரி விட்டிருக்கின்றார் ரணில் விக்கிரமசிங்க. உண்மைதான். அவர் அப்படி நடக்க கூடியவர் என்று உய்த்துணர்ந்து, சஜித்தை ஆதரிக்கும் முடிவை - தீர்மானத்தை - எடுப்பதை தமிழரசுக் கட்சி இன்று வரை - அதாவது மாகாண சபைச் சட்டம் நேற்று நிறை வேற்றப்படும் வரை - தள்ளிப் போட் டிருக்கலாம். ஒருவகையில் தமிழரசின் அரசியல் தந்திரோபாயச் சறுக்கல் இது.

இது விடயத்தில் ரணிலுக்கு எதிரா கக் கூப்பாடு போட்டு, அதில் அரசி யல் செய்வதை விட, ரணிலுக்கு அதே பாணியில் பதிலடி கொடுக்கக்கூடிய மாற்று அரசியல் தந்திரோபாய நகர்வு ஒன்றை தமிழரசு செய்ய வேண்டும். செய்ய முடியும். அதற்கு வழி இருக்கின் றது.

இந்த மாகாண சபை தேர்தல் சட்ட மூலத்தின் மூன்றாம் வாசிப்பை ரணில் அரசு ஒக்டோபருக்கு ஒத்தி வைத் தது என்பது உண்மைதான். ரணில் அல் லாத ஒருவர் இந்த ஜனாதிபதித் தேர் தலில் வெற்றி பெற்றால் நாடாளுமன் றம் உடனே கலைக்கப்பட்டு விடும், அப்போது இந்தத் தேர்தல் சட்டமூலத் திற்கும் அதோ கதிதான் என்று அஞ் சப்படுகின்றது. ஆனால் அதையும் வெற்றி கொள்ள ஒரு வழி உண்டு.

எழுத்து மூலம் சஜித்துடன் உடன்பாடு காணாமல் - அவருக்கு உரிய நிபந்த னைகளை விதிக்காமல் - சஜித்தை ஆத ரிக்கும் முடிவை தமிழரசு எடுத்து விட்டதான ஒரு குற்றச்சாட்டு உண்டு. பல கட்சிகளும் ரணிலுக்கோ சஜித் துக்கோ இந்த தேர்தலில் ஆதரவு என்று அறிவித்துவிட்டு, பின்னர் தான், அவர்களுடன் உடன்பாடு செய்து கொண்டன.

தமிழரசு கூட சஜித்துடன் சில ஏற்பாடுகளுக்கு - எழுத்து மூல உடன்பாட்டுக்கு - ஒப்பந்தம் செய்ய வேண்டி இருக்கும்.

அந்த உடன்பாட்டில் இந்த விட யத்தைச் சேர்க்கலாம். நாடாளு மன்றர் தேர்தலை நடத்தி, புதிய நாடாளுமன்றத்தில் இந்த மாகாண சபை தேர்தல் சட்டத்தை மீண்டும் புதிதாக கொண்டு வந்து உயர்நீதி மன்றத்துக்குப் போய் வந்து, நிறை வேற்ற பல மாதங்கள் பிடிக்கும். சஜித் தமது தேர்தல் விஞ்ஞாபனத் தில், இந்த ஜனாதிபதித் தேர்த லில் வென்று ஆறு மாதங்களுக்குள் மாகாண சபை தேர்தல் நடக்கும் என்று உறுதியளித்திருக்கின்றார். புதிதாக நாடாளுமன்றத் தேர்தலை நடத்தி, அந்த நாடாளுமன்றத்தில் ஆரம்பத்தில் இருந்து மாகாண சபை தேர்தல் சட்டத்தை மீண்டும் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்து, சட்டத்தை நிறைவேற்றிய பின்னர் அதில் மாகாண சபைத் தேர் தலை நடத்தி முடிப்பது என்றால் மேற்படி வாக்குறுதி அளித்த ஆறு மாதங்களையும் விட மிகக் கூடிய காலம் செல்லும்.

அதனால் ஜனாதிபதி தேர்தலில் சஜித் வென்றால், அடுத்த நாளே தற் போதைய நாடாளுமன்றத்தைக் கலைப்பதை விடுத்து, அது ஓர் இரண்டு நாள் அமர்வுகளை நடத்தி, அந்த அமர்வுகளில் நிலுவையாக இருக்கும் மாகாண சபைத் தேர் தல் சட்டமூலத்தை நிறைவேற்ற முயற்சிக்க வேண்டும் என்பதை நிபந் தனையாக விதித்து சஜித்துடன் உடன்பாடு செய்ய வேண்டும்.

அவசரப்பட்டு சஜித்தை ஆதரிக் கும் முடிவை அறிவித்து, அதன் மூலம் மாகாண சபைத் தேர்தல் சட்டத்தை நிறைவேற்றச் செய்வதில் ஏற்பட்ட அரசியல் சறுக்கலை இப்ப டிச் சமாளிக்க தமிழரசு நடவடிக்கை எடுக்கலாம்.

தமிழரசு கட்சியினருக்கு இந்த ஆலோசனை சமர்ப்பணம்.




# அன்புடன் வரவேற்ற தமிழர்களுக்கு நன்றி சிகாகோவின் முதல்வர் ஸ்டாலின் நெகிழ்ச்சி

பேரன்பை பொழிந்து வரவேற்ற தமிழர்களுக்கு நன்றி என்று சிகாகோ நகருக்கு சென்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதள பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

இதுகுறித்து முதல்வர் ஸ்டாலின் நேற்று வெளியிட்ட சமூக வலைதளப்பதிவில்,

"சான் பிரான்சிஸ்கோ நகரில் இருந்து சிகாகோவுக்கு வந்தடைந்தேன். பேரன்பைப் பொழிந்து வரவேற்று நெகிழ வைத்த தமிழ் உடன்பிறப்புகளுக்கு நன்றி" என தெரிவித்துள்ளார்.

முன்னதாக, தமிழகத்துக்கு தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக, முதல்வர் மு.க.ஸ்டாலின் அமெரிக்கா சென்றுள்ளார்.


கடந்த ஒகஸ்ட் 27 ஆம் திகதி சென்னையில் இருந்து புறப்பட்டுச்சென்ற முதல்வருக்கு, சான்பிரான்சிஸ்கோவில் தமிழர்கள் சிறப்பான வரவேற்பு அளித்தனர். அதன்பின், கடந்த ஒகஸ்ட் 29 ஆம் திகதி சான்பிரான்சிஸ்கோவில் உலக முதலீட்டாளர்களை சந்தித்தார். நொக்கியா உள்ளிட்ட 8 நிறுவனங்களுடன் 4600 பேருக்கு வேலையளிக்கும் வகையில் 1300 கோடி ரூபாவுக்கான முதலீட்டுக்கு ஒப்பந்தங்கள் முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டன.

இதையடுத்து, கடந்த ஒகஸ்ட் 31 ஆம் திகதி சான் பிரான்சிஸ்கோவில் நடைபெற்ற அமெரிக்க வாழ் தமிழர்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் பங்கேற்று, அம்மக்கள் மத்தியில் பேசினார்.

இதையடுத்து, சான்பிரான்சிஸ்கோவில் இருந்து சிகாகோ புறப்பட்டுச் சென்றார். சிகாகோவில், தமிழர்கள் ஆரத்தி எடுத்து வரவேற்றனர். சிறுவர்கள் ஸ்டாலின் என ஆங்கிலத்தில் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தி வரவேற்றனர்.

# பாலியல் குற்றவாளிகளுக்கு தூக்கு தண்டனை மசோதா

## மேற்கு வங்க பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றம்



பாலியல் குற்றவாளிகளுக்கு தூக்கு தண்டனை விதிக்கும் மசோதா, மேற்கு வங்க சட்டப்பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

பாலியல் வன்கொடுமை எதிர்ப்பு மசோதாவான 'அபராஜிதா பெண் மற்றும் குழந்தை (மேற்கு வங்க குற்றவியல் சட்டங்கள் திருத்தம்) மசோதா 2024', அம்மாநில சட்டப்பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

முதல்வர் மம்தா பானர்ஜியின் அறிவிப்புக்கு இணக்க. மேற்கு வங்க சட்டப்பேரவையின் சிறப்புக் கூட்டம் நேற்று முன்தினம் கூட்டப்பட்டு, இந்த மசேதா சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்டது. மாநில சட்ட அமைச்சர் மோலோய் கட்டக், மசோதாவை சட்டப்பேரவையில் அறிமுகப்படுத்தினார்,

மசோதா மீதான விவாதத்தில் பேசிய முதல்வர் மம்தா பானர்ஜி,

"இது ஒரு வரலாற்று சிறப்புமிக்க, முன்மாதிரியான மசோதா. நல்ல எண்ணம் உள்ளவர் எவரும் இதை ஆதரிப்பர். இந்த மசோதாவில் கையெழுத்திட மாநில ஆளுநரை, பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்த வேண்டும்.

ஆர்.ஜி. கர் மருத்துவமனை பயிற்சி மருத்துவர் தொடர்பான வழக்கில் மாநில பொலிஸ் விரைவாக குற்றவாளிகளை கைது செய்யாவிட்டால், வழக்கை சி.பி.ஐயிடம் ஒப்படைப்போம் என்று இறந்தவரின் குடும்பத்தினரிடம் நான் கூறியிருந்தேன். கொல்கத்தா உயர் நீதிமன்றத்தின் உத்தரவுப்படி வழக்கு சி.பி.ஐ-க்கு மாற்றப்பட்டது. இப்போது, சி.பி.ஐயிடம் இருந்து எங்களுக்கு நீதி வேண்டும். குற்றவாளிகளை சி.பி.ஐ. தூக்கிலிட வேண்டும்" என தெரிவித்தார்.

மசோதாவுக்கு எதிர்க்கட்சிகள் ஆதரவு அளித்தன. சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் சுவேந்து அதிகாரி, இந்த மசோதாவுக்கு முழு ஆதரவை வழங்குவதாக தெரிவித்தார்.

அதேநேரத்தில், இந்த மசோதாவில் சில திருத்தங்களை அவர் முன்வைத்தார். எனினும், அந்த திருத்தங்கள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. மசோதாவை உடனடியாக அமல்படுத்த வேண்டும் என்று வலியுறுத்திய பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர்கள், ஆர்.ஜி.கர் மருத்துவமனையில் பயிற்சி மருத்துவர் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொல்லப்பட்ட வழக்கில் முதல்வர் மம்தா பானர்ஜி தனது பதவியை ராஜினாமா செய்ய வேண்டும் என்று கோஷமிட்டனர்.

மசோதா மீதான விவாதத்தை அடுத்து நேற்று குரல் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. இதனையடுத்து, இந்த மசோதா ஒருமனதாக நிறைவேற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.



# இஸ்ரேலுக்கான ஆயுத விற்பனையை இடைநிறுத்தியுள்ளது பிரித்தானியா

இஸ்ரேலுக்கான சில ஆயுத விற்பனையை இடைநிறுத்தியுள்ளதாக பிரித்தானியா அறிவித்துள்ளது.

சர்வதேச சட்டத்தில் கடுமையான மீறல்களை மேற்கொள்வதற்கு இந்த ஆயுதங்கள் பயன்படுத்தப்படலாம் எனச் சுட்டிக்காட்டியே பிரித்தானியா இந்த தீர்மானத்தை எடுத்துள்ளது.

இதன்படி, இஸ்ரேலுக்கான 350 ஆயுத ஏற்றுமதி உரிமங்களில் 30 உரிமங்களை பிரித்தானியா இடைநிறுத்தியுள்ளதாகப் பிரித்தானிய வெளியுறவுச் செயலாளர் டேவிட் லாம்மி தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், பிரித்தானியாவின் இந்த அறிவிப்பானது ஏமாற்றம் அளிப்பதாக இஸ்ரேல் குறிப்பிட்டுள்ளதாகச் வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# வெனிசுலா ஜனாதிபதி நிக்கோலஸுக்கு சொந்தமான சொகுசு விமானத்தைப் பறிமுதல் செய்த அமெரிக்கா




வெனிசுலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோவுக்கு சொந்தமான சொகுசு விமானத்தை அமெரிக்கா பறிமுதல் செய்துள்ளது.

இந்த விமானம் மோசடியாக வாங்கப்பட்டு அமெரிக்காவிலிருந்து கடத்தப்பட்டதாக அமெரிக்க அதிகாரிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

மேற்படி விமானம் டொமினிகன் குடியரசில் வைத்து பறிமுதல் செய்யப்பட்டதுடன், இதன் பெறுமதி 13 மில்லியன் டொலர் (இலங்கை ரூபாயில் 400 கோடி) என தெரிவிக்கப்படுகின்றது.

விமானங்களைக் கண்காணிக்கும் வலைத்தளமான குடபைாவ சுயனயச 24 படி, இந்த விமானம் நேற்று முன்தினம் காலை சாண்டோ டொமிங்கோவிலிருந்து ஃபோர்ட் லாடர்டேலுக்கு புறப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டின் பிற்பகுதி மற்றும் 2023 ஆம் ஆண்டின் முற்பகுதிக்கு இடையில், மதுரோவுடன் தொடர்புடையவர்கள் தங்கள் அடையாளங்களை மறைத்து இந்த சொகுசு விமானத்தை வாங்கியதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# அரச ஊழியர்களுக்கான சம்பளத்தை அதிகரிப்பதற்கான பரிந்துரைகள் அடங்கிய நிபுணர் குழுவின் இறுதி அறிக்கை

## ஜனாதிபதியிடம் நேற்று கையளிப்பு



2025 ஜனவரி 1 ஆம் திகதி முதல் அரச ஊழியர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்கான பரிந்துரைகளை உள்ளடக்கிய நிபுணர் குழுவின் இறுதி அறிக்கை, குழுவின் தலைவர் உதய ஆர். செனவிரத்ன மற்றும் ஏனைய குழு உறுப்பினர்களினால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நேற்று செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டது.

இலங்கை அரசுக்கும் சர்வதேச நாணய நிதியத்திற்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாகவும் தேவையான நிதி ஒதுக்கீடுகளை வழங்க வேண்டும் என்ற திறைசேரியின் இணக்கப்பாடு மற்றும் அமைச்சரவையின் அனுமதியுடனும் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது என்று குழுவின் தலைவர் உதய ஆர். சேனவிரத்ன தெரிவித்தார்.

அரச துறையின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை மறுசீரமைப்பதற்கான நிபுணர் குழு அரச மற்றும் தனியார் துறையை பிரதிநிதித்துவப்படுத்தும் 10 உறுப்பினர்களை உள்ளடக்கி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் 2024 ஜுன் 12 ஆம் திகதி அமைச்சரவை அனுமதியுடன் நியமிக்கப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி செயலாளர் உதய ஆர். செனவிரத்ன தலைமையில், தேசிய வரவு செலவுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஜுட் நிலுக்ஷன், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஹிரன்ச கலுதந்திரி, ஒருங்கிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் எஸ். அலோக பண்டார, நிறுவன பணிப்பாளர் நாயகம் எச்.ஏ. சந்தன குமாரசிங்க, வைத்தியர் டெரன்ஸ் காமினி டி சில்வா, ஓய்வுபெற்ற சுகாதார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் நாயகமும் இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் தலைவருமான துமிந்த /ஹலங்கமுவ, பி.சி.எஸ். பிரதம பொது அதிகாரி சந்தி எச். தர்மரத்ன, கொமர்ஷல் வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர் (மனித வளங்கள்) இசுரு திலகவர்தன, ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் ஜீ.எல். வர்ணன் பெரேரா ஆகியோர் இந்தக் குழுவின் ஏனைய உறுப்பினர்களாக அங்கம் வகித்தனர்.

குழுவுக்கு 3 மாதங்களுக்குள் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டிருந்த நிலையில், 18 விடயப்பரப்புக்களின் கீழ் அரச சேவைக்குள் மேற்கொள்ளப்பட வேண்டிய சம்பள அதிகரிப்பு கொள்கைகள் தொடர்பில் பின்பற்ற வேண்டிய விடயங்கள் இந்த அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

"கடந்த பொருளாதார வீழ்ச்சியை அடுத்து, அரசாங்கத்தின் வருவாயை அதிகரிக்க பல நடவடிக்கைகள் எடுக்க வேண்டியிருந்தது. அப்போது, அரச ஊழியர்கள் கடுமையான வாழ்க்கைச் சுமை பெரும் பிரச்னைகளை எதிர்கொண்டனர்.

எத்தகைய பிரச்சினைகள் இருந்தாலும் ஒவ்வொருவரும் தமது பணிகளைச் சரியாகச் செய்தனர். அதன் காரணமாக, 2023ஆம் ஆண்டு நாட்டின் மொத்த தேசிய உற்பத்தி உயர்வடைந்து, பொருளாதாரம் வலுப் பெற்றது.

2023 ஆம் ஆண்டு அரசுக்குக் கிடைத்த பணத்தில், குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான அஸ்வெசும நிவாரணத் திட்டத்தைக் கொண்டு வந்தோம். 2024 இல் பொருளாதார வளர்ச்சியுடன், அரச ஊழியர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை அதிகரிப்பது குறித்து கவனம் செலுத்தினோம்.

அதற்கான அறிக்கையை உதய ஆர். செனவிரத்ன மற்றும் ஏனைய உறுப்பினர்கள் எமக்கு வழங்கியுள்ளனர். அதனை செயற்படுத்தும் பொறுப்புகள் நிதி அமைச்சிடம் கையளிக்கப்படும்.

இதனால் குழு அறிக்கையின் பரிந்துரைகளுக்கு அமைய அனைவருக்கும் சம்பள அதிகரிப்பு வழங்க முடியுமென நம்பும் அதேநேரம், உதய ஆர். செனவிரத்ன குழுவின் அனைத்து உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவிக்கின்றேன்." – என்றார்.

நிபுணத்துவ குழுவின் தலைவர் உதய ஆர். செனவிரத்ன உரையாற்றுகையில்,

"அரச ஊழியர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை மறுசீரமைப்பது தொடர்பிலான அறிக்கையை தயாரிப்பதற்கான குழு அமைச்சரவை அனுமதியுடன் 2024 ஜுன் 12 ஆம் திகதி அரச துறை மற்றும் தனியார் துறையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 10 உறுப்பினர்களைக் கொண்ட குழு நியமிக்கப்பட்டது.

இது தொடர்பான அறிக்கையை 3 மாதங்களுக்குள் வழங்குமாறு எமக்கு பணிப்புரை விடுக்கப்பட்டது. அதன்படி இடைக்கால அறிக்கை ஓகஸ்ட் 12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது. 18 விடயங்களின் கீழ் அரச சேவையில் மேற்கொள்ளப்படவுள்ள சீர்திருத்தங்கள் மற்றும் சம்பள அதிகரிப்பு தொடர்பில் பின்பற்ற வேண்டிய கொள்கையை முன்மொழிந்திருக்கிறோம்.

இதற்கான அமைச்சரவை அங்கீகாரம் ஓகஸ்ட் 12ஆம் திகதி கிடைத்திருந்தது. அதன்படி அனைத்து நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்கள், பல்கலைக்கழகங்கள், இராஜதந்திர சேவை நிறுவனங்கள் உள்ளடங்களாக அனைத்து அரச துறையினருக்கும் சம்பள அதிகரிப்பை பெற்றுக்கொடுப்பதற்கான அறிக்கையை நாங்கள் தயாரித்திருக்கின்றோம்.

குறிப்பாக, அடிப்படை சம்பளம் 24மூ இருந்து 50% – 60% ஆக உயர்கின்றது. இது அடிப்படைச் சம்பளம் 30,000 ரூபாவாக இதன்போது கருத்தில் கொள்ளப்பட்டிருப்பதுடன் இந்த அடிப்படை சம்பளம் 1 முதல் 6 விகிதத்தினால் திருத்தம் செய்யப்படவுள்ளது.

இதன்படி, ஏறக்குறைய 1,1ஃ2 மில்லியன் அரச ஊழியர்களுக்கும் சம்பள உயர்வு கிடைக்கும் என்பதோடு ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கப்படும் வாழ்க்கைச் செலவு கொடுப்பனவை 50மூ சதவீதமாக்குவதற்கும் பரிந்துரைக்கப்பட்டது.

3 மாத காலம் முடிவடைவதற்கு ஒரு வாரத்துக்கு முன்னர் குழுவின் இறுதி அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளித்தோம். அதன்படி அனைத்து அரசு ஊழியர்களுக்கும் பெரும் நிவாரணம் கிடைக்கும் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகளுக்கு திறைசேரியின் இணக்கப்பாடுகளை பெற்றுக்கொண்டதன் பின்பே இந்த பரிந்துரைகளை செய்திருக்கிறோம். அதேபோல் இந்த பரிந்துரைகள் சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்திற்கு அமைவானதாக உள்ளமையும் சிறப்பம்சமாகும்.

எனவே, திறைசேரியின் அனுமதி மற்றும் அமைச்சரவையின் அனுமதியுடன் இதனை 2025 ஜனவரி 01 முதல் அமுல்படுத்த முடியும். அது குறித்து சந்தேகம் கொள்ள அவசியமில்லை.

அதேபோல் அரச சேவைக்குள் செய்ய வேண்டிய பல சீர்த்திருத்தங்கள் குறித்தும் பரிந்துரை செய்திருக்கின்றோம். இந்த மறுசீரமைப்புகள் எதிர்வரும் காலங்களில் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டால் நாட்டில் சிறந்த பொதுச் சேவையை உருவாக்க முடியும். இதன் மூலம் சிறந்த பொது சேவையை வழங்கி நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் அரச பொறிமுறைக்கும் பங்களிப்பு செய்ய முடியும்." – என்றார்.





# வறுமையில் உள்ள குடும்பங்களுக்கு இரு வருடங்களுக்கு ரூ. 20 ஆயிரம்

## அரச ஊழியருக்கு 57,500 ரூபாவுக்குக் குறையாத ஊதியம் வவுனியாக் கூட்டத்தில் நேற்று சஜித் பிரேமதாஸ அறிவிப்பு

(கே.வசந்தன்)

வறுமை நிலையில் உள்ள ஒவ்வொரு குடும்பங்களிற்கும் தலா 20 ஆயிரம் ரூபா இரண்டு வருடங்களுக்கு வழங்கப்படும். அரச உத்தியோகத்தியோகத்தர்களின் குறைந்தபட்ச ஊதியமாக 57,500 ரூபா மாற்றப்படும் என ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் கூட்டமைப்பின் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் வவுனியா வைரவபுளியங்குளத்தில் அமைந்துள்ள யங்ஸ் டார் மைதானத்தில் நேற்று இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் -

அரச ஊழியர்கள் இந்த அரசாங்கத்தில் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள். எனது ஆட்சியில் அவர்களுக்கு 25 வீத சம்பள அதிகரிப்பு மேற்கொள்ளப்படும். தற்போது அவர்களுக்கு வழங்கப்படுகின்ற கொடுப்பனவு 25 ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கப்படும். குறைந்தபட்ச ஊதியமாக 57,500 ரூபா மாற்றப்படும். அரச ஊழியர்கள் இந்த நாட்டின் சொத்து. அரச சேவையின் தரம் விருத்தி செய்யப்பட வேண்டும். உங்களுடைய ஒத்துழைப்பை எங்களுக்குத் தாருங்கள். எதிர்வரும் ஜனவரி மாதத்தில் இருந்து உங்களின் சகல பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கான நடவடிக்கையினை நாம் எடுப்போம்.

அத்துடன் இந்த வவுனியா பிரதேசத்தில் வாழ்கின்ற கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தினை எனது அரசு மேம்படுத்தும். பல்துறைகளிலும் அபிவிருத்தியடைந்த இடமாக இதனை மாற்றுவதற்கான நடவடிக்கையினை நிச்சயமாக எடுப்பேன்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அரசியல் சதி செய்து என்னை தோற்கடித்தார்கள். என்னால் முன்னெடுக்கப்பட்ட வீட்டுத்திட்டங்கள் அனைத்தும் கோட்டா அரசாங்கத்தினால் நிறுத்தப்பட்டன. எனவே எனது ஆட்சியில் நிறுத்தப்பட்ட அனைத்து வீட்டு வேலைத்திட்டங்களும் நிச்சயமாக முழுமையாக வழங்கப்படும்.

அத்தோடு நாட்டின் வறுமை நிலையைக் குறைக்க வேண்டும். சேமிப்பு, முதலீடு, நுகர்வு, உற்பத்தி, ஏற்றுமதி இவற்றினை மையப்படுத்தி வறுமை நிலையில் உள்ள ஒவ்வொரு குடும்பங்களிற்கும் தலா 20 ஆயிரம் ரூபா இரண்டு வருடங்களுக்கு வழங்கப்படும். இதன்மூலம் சுயபொருளாதாரத்தினை வளர்ச்சியடைய செய்யவேண்டும். இந்த நிலையான வேலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவேன்.

கல்வித்துறை, சுகாதாரத்துறை, விவசாயத்துறை ஆகியன எனது ஆட்சியில் மேம்படுத்தப்படும். மகாவலி ஏ வலயம் அபிவிருத்தி செய்யப்படும். விவசாயக்கடன்கள் அனைத்தும் நீக்கப்படும். புதிய உபகரணங்கள் விவசாயிகளிற்கு வழங்கப்பட்டு விவசாயத்தில் புதிய முறைமை ஒன்று உருவாக்கப்படும்.

வவுனியாவில் இளைஞர்களின் தொழில் வாய்ப்பினை கருத்தில் கொண்டு கைத்தொழிற்சாலைகள் உருவாக்கப்பட்டு வேலைவாய்ப்பு பிரச்சனைகள் தீர்க்கப்படும். இந்த அரசாங்கத்தினால் ஒரு கடவுச்சீட்டை கூட சீராக வழங்க முடியாதிருக்கின்றது.

இந்த நிலைமையில் அவர்களால் எவ்வாறு தொழிற்சாலைகளை வழங்க முடியும்? தொழிற்சாலைகளை எரித்து அழித்தவர்கள் எவ்வாறு அதனை நிறுவித்தருவார்கள்? எனவே நீங்கள் நன்றாக சிந்தியுங்கள்.

ஐக்கிய மக்கள் கூட்டணி சிறப்பான அணியினை கொண்டது. நாட்டை சிறப்பாக வழி நடத்தக்கூடிய சிறந்த அணி எம்மிடம் உள்ளது. போர் நிறைவுற்ற பின்னர் சர்வதேச ஒத்துழைப்பு மாநாடு ஒன்றை இந்த ஆட்சியாளர்களால் நடத்த முடியாமல் உள்ளது. இது பற்றி அவர்கள் சிந்தித்தார்களா? எதிர்காலத்தில் வட-கிழக்கு மாகாணங்களை அடிப்படையாக வைத்து சர்வதேச கொடையாளர் மாநாடு ஒன்றை நடத்தி இந்த மாகாணங்களை அபிவிருத்தி செய்ய முயற்சிகளை எடுப்பேன். எனவே எதிர்வரும் காலத்தில் அபிவிருத்தி புரட்சியோடு நாம் உங்களை சந்திப்போம். - என்றார்.

# நல்லூர் தேர் திருவிழாவில் 51 பவுண் நகைகள் அபேஸ்

(ந.லோகதயாளன்)

நல்லைக் கந்தன் ஆலய இரதோற்சவ தினத்தன்று ஒரே நாளில் 51தங்கப் பவுண் நகைகள் களவாடப்பட்டுள்ளன என மாநகர சபையின் உற்சவகால பணிமனையில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2024-09-01 அன்று இடம்பெற்ற தேர் உற்சவ தினத்தில் 20 பேரின் 51 பவுண் தங்க நகைகள் களவாடப்பட்டன என்று இந்தப் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறு தங்க நகைகளை களவு கொடுத்தவர்களின் நகைகள் எவையும் இதுவரை கிட்டியதாக எந்தத் தகவலும் கிடைக்கவில்லை.



# போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டவருக்கு ஆயுள் தண்டனை

ஹெரோயின் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டார் எனக் கூறப்படும் நபர் ருவருக்கு ஆயுள் தண்டனை விதித்து கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

59 வயதுடைய நபருக்கே இவ்வாறு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டவர் கடந்த 2021 ஆம் ஆண்டு கல்கிஸை பட்டோவிட்ட பிரதேசத்தில் வைத்து ஹெரோயின் போதைப்பொருளுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இதையடுத்து, சந்தேக நபருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜாவினால் நேற்று இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது



# போதைப்பொருளுடன் இரு வர்த்தகர்கள் கைது!

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆரையம்பதி பகுதியில் ஒன்றரைக் கிலோ கேரள கஞ்சா, 25 கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணை பிரிவினர் பிரிவு அதிகாரிகள் மேற்கொண்ட திடீர் தேடுதலின்போது மேற்படி சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 32 மற்றும் 38 வயதுடையவர்களாவர்.

ஒருவரிடம் இருந்து ஒன்றரைக் கிலோ கேரள கஞ்சாவும், மற்றவரிடம் இருந்து 25 கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் வர்த்தக நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்திய கையடக்கத் தொலைபேசி ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளன.

நீண்ட நாட்களாக இப்பகுதியில் கொழும்பிலிருந்து போதைப்பொருட்கள் பெற்று விற்பனை செய்து வந்த போதைப்பொருள் வர்த்தகர்கள் இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் சந்தேகநபர்களையும் கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்களையும் காத்தான்குடி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.





# அநுரவுக்குத் தமிழர்கள் வாக்களிக்கமாட்டார்கள்!

## விக்னேஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு





தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்கவால் நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்ற முடியாது என்று தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

அவரது இல்லத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் நாட்டைத் திருடியவர்கள், சூறையாடியவர்களைப் பிடித்து சிறையில் அடைப்பார் என்பது உண்மையான விடயம். ஆனால், அவரால் நாட்டின் பொருளாதாரத்தை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கான திட்டங்களையோ அல்லது சர்வதேச ஒத்துழைப்பையோ அவரால் பெற முடியாது.

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டுமானால் அவர்கள் சீனாவின் உதவியை நாட வேண்டிய தேவை ஏற்படும். ஏற்கனவே நாடு சீனாவின் கடன்பொறிக்குகள் சிக்கியுள்ள நிலையில் நாட்டு மக்கள் அதனை விரும்பமாட்டார்கள்.

அதுமட்டுமல்ல தேசிய மக்கள் கட்சியினர் சீனாவின் கொள்கைகளுடன் ஒத்துப்போகும் நிலையில் அவர்கள் ஆட்சிக்கு வருவார்களானால் இலங்கைத் தீவின் பிராந்திய அமைதிக்குப் பங்கம் ஏற்படும்.

என்னைப் பொறுத்தவரையில் அநுரவுக்குத் தமிழ் மக்கள் வாக்களிக்க மாட்டார்கள் ஏனெனில் வடக்கு, கிழக்கைப் பிரித்தவர்கள், 1983 ஆம் ஆண்டு கலவரத்தின் பின்னணியில் பல தமிழ் மக்கள் கொல்லப்படுவதற்குக் காரணமாக இருந்தவர்கள் ஜே.வி.பியினர். இப்போது அவர்கள் தேசிய மக்கள் சக்தி என்ற பெயருடன் தேர்தலில் களம் இறங்கியுள்ளனர்." – என்றார்.

# வாள்வெட்டுத் தாக்குதலில் காயமடைந்த இளைஞர் சிகிச்சை பலனின்றி மரணம்!



வாள்வெட்டுத் தாக்குதலில் காயமடைந்த இளைஞர் ஒருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் ரத்கம, சிறிகந்துரவத்த பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிறிகந்துரவத்த பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞரே உயிரிழந்துள்ளார்.

சடலம் பிரதே பரிசோதனைக்காக கராப்பிட்டிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களைக் கைது செய்வதற்கான விசாரணைகள் மேற்கொண்டுள்ளப்பட்டு வருகின்றன என்று ரத்கம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட 'பொடி பிந்து' சிக்கினார்!

கிராதுருகோட்டை பகுதியில் ஹெரோயின் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட"பொடி பிந்து" என அழைக்கப்படும் நபர் 3 ஆயிரத்து 280 மில்லிகிராம் ஹெரோயினுடன் கல்போருயாய பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 84, கனிசம தொகுதி, கல்போருயா, கிராந்துருகோட்டை என்ற முகவரியில் வசிக்கும் 30 வயதுடையவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி சந்தேகநபர் இதற்கு முன்னர் குறித்த பகுதிகளில் பல்வேறு திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளார் எனவும், பின்னர் கொழும்பு பகுதிக்குச் சென்று அங்கிருந்து ஹெரோயின் உள்ளிட்ட போதைப்பொருட்களைக் கொண்டு வந்து கிராதுருகோட்டை பகுதியில் விற்பனையில் ஈடுபட்டுள்ளார் எனவும் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலுக்கமைய பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது சந்தேகநபர் ஹெரோயின் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

பதுளை பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் சுஜித் வேதமுல்ல, பதுளை பொலிஸ் பிரிவு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வசந்த கந்தேவத்த, உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜி.டபிள்யூ.எஸ்.பாலிபான ஆகியோரின் பணிப்புரையின் பேரில், குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள், கிராதுருகொட்ட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுதேஷ் சதுரங்க ஆகியோர் இணைந்து சந்தேகநபரைக் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபரை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி பொலிஸ் காவலில் வைத்து விசாரிக்க நீதிமன்ற உத்தரவைப் பெறவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.




# சுன்னாகம் பொலிஸாரால் குடும்பஸ்தர் சித்திரவதை!

## விசாரணைகளை ஆரம்பித்தது மனித உரிமை ஆணைக்குழு




யாழ்ப்பாணம், சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள வீடொன் றினுள் நள்ளிரவு வேளை அத்துமீறி நுழைந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் குடும்பஸ்தரை எவ்வித காரணமும் கூறாது கைது செய்துள்ளனர் எனவும், கைது செய்த பின்னர் அவரைச் சித்திர வதைக்குட்படுத்தியுள்ளனர் எனவும் பாதிக்கப்பட்டவரின் மனைவி ஊடகங் களிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

”கடந்த 28ஆம் திகதி நள்ளிரவு வேளை எமது வீட்டின் மதில் ஏறி பாய்ந்து, வீட்டின் முன் பக்க கதவைக் கால்களால் உதைத்து உடைத்து வீட்டினுள் அத்து மீறி நுழைந்த சுன்னாகம் பொலிஸார் எனது கணவரைத் தாக்கிக் கைது செய்தனர்.

கணவரை எதற்காகக் கைது செய்கி றீர்கள் என்று கேட்டவேளை அதற்கு அவர்கள் பதில் அளிக்கவில்லை. கண வரின் கைதைத் தடுக்க நிறைமாதக் கர்ப்பிணியான நானும், கணவரின் அண்ணாவின் பெண் பிள்ளைகளும் முயன்ற வேளை எம்மையும் அவர்கள் தாக்க முற்பட்டனர்.

கணவரின் அண்ணாவின் மகள் கைத்தொலைபேசியைக் கையில் வைத் திருந்த வேளை வீடியோ எடுக்கிறீயா எனப் போனைப் பறித்து உடைக்க முயன்றனர்.

நாம் கணவரைப் பொலிஸார் காரணமின்றி கைது செய்து அழைத் துச் செல்வதனைத் தடுக்க முயன்ற போதிலும் எம்மைத் தாக்குவது போன்று அச்சுறுத்தி , கணவனை வீட்டில் இருந்து இழுத்துச் சென்று வெளியில் நின்ற ஓட்டோவில் ஏற்றிச் சென்றனர்.

கணவரைப் பொலிஸார் அழைத்துச் செல்லும்போதே அவரின் கண்களைக் கட்டியுள்ளனர். பின்னர் யாருடனோ தொலைபேசியில் தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர், கணவரின் பெயரைக் கூறி அவரைக் கைது செய்து விட்டோம் எனக் கூறியுள்ளார்.

நாம் நள்ளிரவே சுன்னாகம் பொலிஸ் நிலையம் சென்றபோது , கணவரை அடித்து துன்புறுத்தி இருந்தனர். அது தொடர்பில் கேட்டபோது, சந்தேகத்தில் கைது செய்துள்ளோம் எனக் கூறி எம்மை அங்கிருந்து அனுப்பி விட்டனர்.

மறுநாள் 29ஆம் திகதி நாம் யாழ். மாவட்ட பொலிஸ் அத்தியட்சகரின் அலு வலகம் சென்று முறையிட்டோம். அவர் அது தொடர்பில் சுன்னாகம் பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் தொலைபேசியில் விசாரித்தார். அவர்கள் ஏதோ கூற எம்மை அனுப்பி வைத்தார்.

நாங்கள் மீண்டும் சுன்னாகம் பொலிஸ் நிலையம் சென்ற வேளை கணவரைப் பொலிஸ் நிலையப் பொறுப் பதிகாரி, தமிழ் பொலிஸ் உத்தியோ கத்தரான உப பொலிஸ் பரிசோதகர் உள்ளிட்டோர்பைப்,வயர்களால்மிகமோச மாகத் தாக்கி சித்தரவதை புரிந்தனர்.

கணவரை நிலத்தில் முழங்காலில் இருத்தி அவர்கள் தாக்கினர். தாக்குத லுக்கு இலக்கான கணவர் சத்தி எடுத் தார்.

கணவரைக் கைது செய்த பொலி ஸார் 24 மணி நேரம் கடந்தும் நீதி மன்றத்தில் முற்படுத்தாது, சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மிக மோசமான முறையில் சித்தர வதைக்குள்ளாக்கினர்.

பின்னர் அவரை விடுவித்த நிலை யில் நாம் அவரைத் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சேர்த்தோம். தற்போது எனது கணவர் வைத்தியசா லையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.” – என்றார்.

அதேவேளை குறித்த சம்பவம் தொடர்பில் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகம் கவனம் செலுத்தியுள்ளது எனவும், பாதிக்கப்பட்ட நபரை திங்கட் கிழமை தெல்லிப்பளை ஆதார வைத் தியசாலையில் நேரில் பார்வையிட்டு அவரது வாக்கு மூலங்களைப் பெற்றுள் ளோம் எனவும், அதன் அடிப்படை யில் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள் ளோம் என்றும் மனித உரிமை ஆணைக் குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜ் தெரிவித்துள்ளார்.

# மனைவியைக் கோடரியால் தாக்கி படுகொலை செய்த கொடூர கணவர்

அவிசாவளை, கெடஹெத்த பகுதி யில் கணவர் தனது மனைவியைக் கோடரியால் தாக்கிக் கொலை செய் துள்ளார்.

திவுரும்பிட்டிய, கெடஹெத்த பகுதி யைச் சேர்ந்த 43 வயதுடைய பெண்ணே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

கணவர் – மனைவிக்கிடையிலான குடும்பத் தகராறு காரணமாகவே இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து, கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர் அவிசா வளை பொலிஸாரினால் கைது செய் யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை அவிசா வளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# வைத்தியர்கள் கவனவீர்ப்புப் போராட்டம்

நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையின் வைத்தியர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வைத்தியசாலை பிரதான நுழைவாயில் முன்பாக பல்வேறு பதாதைகளை ஏந்தியவாறும், கோஷங்களை எழுப்பியவாறும் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த விடயம் தொடர்பில் ஊடகவியலாளர் சந்திப்பு நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலை காரியாலயத்தில் கேட்ப்போர் கூட மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது அரச வைத்திய அதிகாரிகள் சங்க நுவரெலியா கிளையின் வைத்தியர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

“நமது நாட்டிலிருந்து விசேட வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளிநாடுகளுக்கு வெளியேறியுள்ளனர் என்று விசேட வைத்தியர்களின் சங்கம் தெரிவித்துள்ளனர்.

இதற்குப் பிரதான காரணம் தற்போதைய அரசே. வைத்தியர்கள் எதிர்நோக்கும் பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதிலும் இதுவரை ஒன்றுமே நிறைவேற்றப்பட வில்லை.

அத்துடன் அத்தியாவசிய மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் உடனடியாக மக்களுக்குக் கிடைக்க வழி செய்ய வேண்டும் .

எவ்வித முன்னறிவிப்பும் இன்றி முறையற்ற வைத்தியர்களின் இடமாற்றம் வழங்குவதை நிறுத்த வேண்டும்.

வாழ்வாதாரத்துக்கு ஏற்ற ஊதியங்களை அதிகரிக்க வேண்டும். வைத்தியசாலையில் நிலவும் ஊழியர் பற்றாக்குறையை உடன் நிவர்த்தி செய்ய வேண்டும்.

குறிப்பாக காதாரத்துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் குறித்து மக்களுக்கு உண்மையை வெளிப்படுத்தும் தொழிற்சங்கத் தலைவர்களை ஒடுக்கும் நோக்கில் அமுல்படுத்தப்படும் ஒழுக்காற்று விசாரணைகள் மற்றும் ஏனைய நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும்.

இவ்வாறு ஏராளமான பிரச்சினைகள் உள்ளன என்று கூறிக்கொண்டே போகலாம். எனினும், இனிவரும் நாட்களிலாவது சரி நாம் முன்வைத்த கோரிக்கைகளுக்குச் சுகாதார அமைச்சால் எந்தவொரு தீர்வும் கிடைக்காவிட்டால் நாடு பூராகவும் உள்ள வைத்தியசாலையில் அனைத்து சேவைகளையும் நிறுத்தி பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் குதிப்போம்.” – என்றனர்.








தொடர்ச்சி▼




# அதிகமாகச் செலவு செய்தால் குடியுரிமையை இழக்க நேரிடும்

## ஜனாதிபதி வேட்பாளர்களுக்குத் தேர்தல் ஆணைக்குழு எச்சரிக்கை

ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர்கள் தங்கள் தேர்தல் பிரச்சாரத்தின்போது அனுமதிக்கப்பட்டதை விட அதிக தொகையைச் செலவிட்டமை கண்டு பிடிக்கப்பட்டால் அவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகள் எடுக்கப் படலாம் என்று தேர்தல்கள் ஆணைக் குழு எச்சரித்துள்ளது.

அவர்கள் தங்கள் பதவிகளை இழக்க நேரிடலாம், பிரஜாவுரிமை பறிக்கப்பட லாம் என்று தேர்தல்கள் ஆணையா ளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்க தெரி வித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“தேர்தல் முடிவடைந்து 21 நாட்க ளுக்குள் அவர்களின் வருமானம் மற்றும் அவர்களின் செலவீனங்கள் குறித்து வேட்பாளர்கள் முழுமையான அறிக்கைகளைச் சமர்ப்பிக்க வேண்டும். அந்த அறிக்கைகளைச் செய்தித் தாள்கள், இணையங்கள் மூலம் பகி ரங்கப்படுத்துவோம்.

அவர்கள் வழங்கிய தகவல்களில் தவறு காணப்பட்டால் பொதுமக்கள் இது குறித்து பொலிஸாருக்குத் தெரிவிக்க லாம். உரிய நடவடிக்கையை எடுக்க லாம்.” – என்றார்.



# கருணாரத்ன பரணவிதானகே எம்.பியாகப் பதவிப்பிரமாணம்

கருணாரத்ன பரணவிதானகே ஒன்ப தாவது நாடா ளுமன்றத்தின் உறுப்பி னரான சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன முன்னிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

சபாநாயகர் முன்னிலையில் சத்தி யப்பிரமாணம் செய்து கொண்டதன் பின் னர் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர முன்னிலையில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஏட்டிலும் அவர் கையொப்பமிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித் துவப்படுத்தி இரத்தினபுரி மாவட்ட நாடளுமன்ற உறுப்பினராகப் பணியாற் றிய தலதா அத்துகோரல நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றி டத்துக்கே கருணாரத்ன பரணவிதானகே நியமிக்கப்பட்டுள்ளார்.

கருணாரத்ன பரணவிதானகே எட்டா வது நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசி யக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி நாடாளுமன்ற உறுப்பினராகப் பணி யாற்றியிருந்ததுடன், அந்தக் காலப்பகுதி யில் வெகுஜன ஊடக மற்றும் நாடாளு மன்ற விவகார, திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி, உள்ளூராட்சி மன்றம் போன்ற அமைச்சுக்களின் பிரதி அமைச்சராகவும் பணியாற்றியுள்ளார்.



# குடும்பஸ்தர் படுகொலை: சந்தேகநபர் ஒருவர் கைது

(கே.வசந்தன்)

யாழ்ப்பாணம், சில்லாலையைச் சேர்ந்த குடும்பஸ்தர் மீது கூரிய ஆயுதத்தால் தாக்கிக் கொலை செய்தமை தொடர்பில் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார் என்று வவுனியா மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, பூவரசங்குளம் பொலிஸ் பிரிவில் உள்ள கற்பகபுரம் கிராமத்தில் கடந்த 26 ஆம் திகதியன்று கூரிய ஆயுதத்தால் தலையில் தாக்கப்பட்டு படுகாயமடைந்த 36 வயதுடைய மைந்தன் இருதயராஜா எனும் யாழ். சில்லாலையைச் சேர்ந்த குடும்பஸ்தர் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த 28 ஆம் திகதி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இது தொடர்பான விசாரணைகளைப் பூவரசங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வந்த நிலையில் பிரதான சந்தேகநபர் தலைமறைவாகியிருந்தார். இந்நிலையில், வவுனியா மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவுக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் அறிவுறுத்தலுக்கமைவாக அந்தப் பிரிவுக்குப் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் சுகந்த் தலைமையில் உப பொலிஸ் பரிசோதகர் குணதிலக, பொலிஸ் சார்ஜன்ட்களான விஜேசிங்க, மெதகொட பொலிஸ் கொன்ஸ்தாபிள் கிரிநாத் ஆகிய குழுவினர் விசேட நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதன்போது மறைந்திருந்த நிலையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

வவுனியா, கற்பகபுரம் கிராமத்தை சேர்ந்த 29 வயதுடைய நபரே கைது செய்யப்பட்டார்.

மேலதிக விசாரணைகளின் பின் மேற்படி சந்தேகநபரை நீதிமன்றத்தில் முற்படுத்தப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.



# துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய மூவர் சிக்கினார்கள்!

ஜா – எல மற்றும் கொழும்பு ஜிந்துப்பிட்டி ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய மூன்று சந்தேகநபர்கள் பேலியகொடை பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸ் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"கடந்த ஆகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி ஜா – எல பிரதேசத்தில் பெண் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டமை மற்றும் ஜனவரி மாதம் 26 ஆம் திகதி கொழும்பு – ஜிந்துப்பிட்டி பிரதேசத்தில் நபர் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டமை ஆகிய சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் கடந்த 27 ஆம் திகதி பேலியகொடை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இம்புல்கொட பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய இளைஞரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இதனையடுத்து, சந்தேகநபரை பொலிஸ் தடுப்பு காவலில் வைத்து விசாரணை நடத்த வெலிசர நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இதன்போது, சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், இந்தக் கொலைச் சம்பவங்களுக்கு உதவி செய்ததாகக் கூறப்படும் மேலும் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தேகடன மற்றும் அநுராதபுரம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 26 மற்றும் 30 வயதுடைய நபர்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பேலியகொடை பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்." – என்றுள்ளது.



# அதிகாரப் பகிர்வுடன் கூடிய அரசியல் தீர்வு மிக அவசியம்

## இலங்கையில் தேர்தலின் பின்னர் வருகின்ற புதிய அரசுடன் இணைந்து பணியாற்றத் தயார் என்கிறார் பிரிட்டன் தூதுவர்

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் வருகின்ற புதிய அரசுடன் அதிகாரப் பரவலாக்கத்துடன் கூடிய அரசியல் தீர்வு தொடர்பாக இணைந்து செயற்பட எதிர்பார்க்கின்றோம் என்று இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் அன்ட்ரூ பெட்ரிக் தெரிவித்தார்.

பிரிட்டன் பல வருடங்களாக அதிகாரப் பரவலாக்கத்துடன் கூடிய அரசியல் தீர்வு தொடர்பாக வலியுறுத்தி வருகின்றது என்றும் சுட்டிக்காட்டிய தூதுவர், பிரதான வேட்பாளர்கள் இந்த விடயம் தொடர்பில் தமது கொள்கைகளை வெளியிட்டுள்ளமையையும் எடுத்துக் கூறினார்.

பாத்பைன்டர் நிறுவனம் கொழும்பில் ஏற்பாடு செய்த கலந்துரையாடல் ஒன்றில் பங்கேற்ற பிரிட்டன் தூதுவர் இந்த விடயங்களைச் சுட்டிக்காட்டினார்.

பிரிட்டனின் புதிய அரசின் வெளியுறவு அணுகுமுறை, தெற்காசியாவில் பிரிட்டனின் பிரசன்னம், பிரிட்டனுக்கும் இலங்கைக்கும் இடையிலான இரு தரப்பு உறவு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் அவர் கருத்துக்களை முன்வைத்தார்.

“பிரிட்டனுக்குத் தெற்காசிய பிராந்தியம் முக்கியத்துவமிக்கது. எதிர்காலம் இங்கு முக்கியத்துவமிக்கதாக உள்ளது. இலங்கையின் இரண்டாவது ஏற்றுமதி வர்த்தக பங்காளராக தொடர்ந்தும் இருந்து வருகின்றது” என்றும் தூதுவர் அன்ட்ரூ பெட்ரிக் சுட்டிக்காட்டினார்.

சுற்றுலாத்துறையிலும் இலங்கையில் இரண்டாவது இடத்தைப் பிரிட்டன் சுற்றுலாப் பயணிகள் பெறுகின்றனர் என்றும் தூதுவர் குறிப்பிட்டார்.

மேலும், பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கத்துவம் வகிக்காதன் காரணமாக இலங்கை போன்ற நாடுகளுக்கு உதவும் நோக்கில், “அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கான வர்த்தக திட்டம்” என்ற செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது என்றும் தூதுவர் கூறினார்.

இந்தக் கலந்துரையாடலில் பிரிட்டன் தூதுவர் அன்ட்ரூ பெட்ரிக் தெரிவித்த முக்கிய விடயங்கள் வருமாறு:-

“இலங்கைக்கும் பிரிட்டனுக்கும் இடையிலான உறவு முக்கியத்துவம் மிக்கது. பிரிட்டன் தொடர்ந்தும் இலங்கையில் இருந்து அதிக இறக்குமதிகளைச் செய்கின்றது. இலங்கையின் ஏற்றுமதி பொருளாதாரத்தில் பிரிட்டன் இரண்டாவது இடத்தைப் பிடிக்கின்றது. சுற்றுலாத்துறை இலங்கையில் மிக முக்கியமான ஆற்றலைக் கொண்டிருக்கின்றது. அதிலும் பிரிட்டன் இலங்கைக்குச் சிறந்த பங்களிப்பை வழங்குகின்றது.

சட்டவிரோத குடியேற்றவாசிகளை ருவாண்டாவுக்கு அனுப்புகின்ற திட்டம் புதிய பிரிட்டன் அரசால் நிறுத்தப்பட்டுள்ளது. எந்தவொரு நாட்டுக்கும் இது தொடர்பான பிரச்சினை சவாலாகவே இருக்கும். அதிகமான மக்கள் 20ஆயிரம் டொலர்களுக்கும் அதிக பணத்தை கடத்தல் காரர்களுக்கு கொடுத்து பிரிட்டனுக்கு வர முயற்சிக்கின்றனர்.

ஐ.நா. மனித உரிமை பேரவையின் புதிய அமர்வு நடைபெறவுள்ளது. இதில் இணை அனுசரணை நாடுகள் குழு எவ்வாறான முடிவை எடுத்துள்ளது என்று தற்போது கூற முடியாது. ஆனால், இப்போது இலங்கையில் தேர்தல் காலம் என்பதால் தேர்தலின் பின்னர் இந்த விடயத்தில் செயற்படுவதற்குப் புதிய கதவுகள் திறக்கப்படும் என்று நம்புகின்றோம்.” - என்று குறிப்பிட்டார்.

இதேவேளை, ஜெனிவா கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பில் புதிய பிரேரணை கொண்டு வரப்படுமா என்ற எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த பிரிட்டன் தூதுவர், அதற்கு அமர்வு தொடங்கும் வரை காத்திருக்க வேண்டியது அவசியம் என்று பதிலளித்தார்.

இது இவ்வாறிருக்க அரசியல் தீர்வு தொடர்பில் வடக்கு, கிழக்கு மக்கள் மற்றும் தலைவர்கள் எவ்வாறான விடயங்களை உங்களிடம் தெரிவித்தார்கள் என்று எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த பிரிட்டன் தூதுவர்,

“இந்த விடயம் தொடர்பில் நான் மிகக் கவனமாகப் பேச வேண்டியிருக்கின்றது.

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் வருகின்ற புதிய அரசுடன் அதிகாரப் பரவலாக்கத்துடன் கூடிய அரசியல் தீர்வு தொடர்பாக இணைந்து செயற்பட எதிர்பார்க்கின்றோம்.

பிரிட்டன் பல வருடங்களாக அதிகாரப் பரவலாக்கத்துடன் கூடிய அரசியல் தீர்வு தொடர்பாக வலியுறுத்தி வருகின்றது. பிரதான வேட்பாளர்கள் இந்த விடயம் தொடர்பில் தமது கொள்கைகளை வெளியிட்டுள்ளனர்.” - என்றார்.

# இன்றைய ராசி பலன்கள் - 04.09.2024




இன்று பதற்றமான சூழ்நிலை காணப்படும். முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள் அல்ல. இன்று சில விஷயங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும்.

கூடுதல் பணிகள் காரணமாக குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. பணிகளின் போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை காண்பிப்பீர்கள். உறவில் நல்லிணக்கத்தைப் பேண அதனை தவிர்த்தல் நல்லது.

வீட்டுப் புனரமைப்பிற்காக பணம் செலவு செய்ய நேரலாம். தேவையற்ற செலவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

தாயின் உடல் நலத்திற்காக செலவு செய்ய நேரும். இது உங்களுக்கு வருத்தத்தை ஏற்படுத்தும்.




இன்று நீங்கள் ஆன்மீகத்தில் ஈடுபடும் சூழல் ஏற்படும். இதனால் உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும். சமூக கூட்டங்களில் கலந்து கொள்வீர்கள். புதிய நண்பர்களை உருவாக்கிக் கொள்வீர்கள்.

வெற்றிகரமான பலன்களைக் காண கடினமாக உழைக்க வேண்டும். சில பணிகள் முடிக்க முடியாமல் நிலுவையில் வைக்க வாய்ப்புள்ளது.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்பட்ட உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க அத்தகைய உணர்வுகளை தவிர்க்க வேண்டும்.

இன்று கூடுதல் செலவினங்கள் காணப்படும். கடன் வாங்க நேரலாம்.

மன உளைச்சல் காரணமாக தோள் வலி ஏற்படலாம். தியானப் பயிற்சி மூலம் ஆறுதல் பெறலாம்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கலாம். தைரியம் மற்றும் உறுதி கொண்டால் நன்மை கிடைக்கும். இன்று மொத்தத்தில் வளர்ச்சி கிடைக்கும். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

நீங்கள் புத்துணர்ச்சியோடு வேலையை மகிழ்ச்சியுடன் செய்வீர்கள். உங்கள் திறமை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச வேண்டும். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நிதிநிலைமை சாதகமாக இருக்கும். இன்று அதிர்ஷ்டமான நாள். பண வரவு காணப்படும்.

உங்கள் மன வலிமை காரணமாக இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.




இன்று நீங்கள் உற்சாகத்துடன் இருக்க வேண்டும். அதிக சிந்தனைகளை தவிர்க்க வேண்டியது அவசியம். ஆன்மீகத்தில் ஈடுபட்டு அமைதி காணலாம்.

அதிக பணிகள் காரணமாக பணியில் தவறுகள் செய்ய வாய்ப்புள்ளது. உங்கள் பொறுப்புகளை ஆற்றும் போது கவனமாக ஆற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் எரிச்சலும் கோபமும் அடைவீர்கள். எனவே உங்கள் பிரியமானவரிடம் நட்பு முறையோடு பழகுவது நல்லது.

அஜாக்கிரதை காரணமாக பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. நிதி நிலைமையை மோசமாக்கக்கூடிய வகையில் தேவையற்ற செலவுகள் ஏற்படும்.

செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் ஏற்படலாம். உணவு முறையில் கவனம் தேவை.




இன்றைய நாள் உங்கள் பொறுமையை சோதிக்கும். மகிழ்ச்சியுடனும் திருப்தியுடனும் இருப்பது நல்லது. இன்று தெளிந்த மனதுடன் இருந்தால் உங்களுக்கு சாதகமான முடிவுகளை எடுக்கலாம்.

இன்று பணிகள் இறுக்கமாக காணப்படும். பணியின் போது தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

உங்கள் மனதில் உள்ள கசப்பான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் குழப்பம் ஏற்படும். உறவின் நல்லிணக்கம் பாதிக்கும்.

இன்று தேவையற்ற செலவினங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும். சிறிது பணம் இழப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

இன்று முதுகுவலி வருவதற்கான வாய்ப்பு உள்ளது. பிரார்த்தனை அல்லது தியானம் மேற்கொள்வது நல்லது.




இன்று உங்களுக்கு சாதகமான பலன்கள் கிடைக்காது. உங்கள் செயல்கள் சுமுகமாக நடக்க அதிக முயற்சிகள் எடுக்க வேண்டும். சில சமயங்களில் நம்பிக்கை இழப்பீர்கள். தன்னம்பிக்கையுடன் செயல்பட்டால் வெற்றி காணலாம்.

அதிக பணிகளை சந்திக்க நேரும். உங்கள் சக பணியாளர்களுடன் சகஜமாகப் பழகவும்.

நீங்கள் பொறுமை இழந்து காணப்படுவீர்கள். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உங்கள் துணையிடம் புரிந்துகொண்ட மனநிலையோடு பழக வேண்டும்.

நிதிநிலைமை சீராக இருக்காது. இன்றைய செலவினங்களை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று மகிழ்ச்சியளிக்கத்தக்க வகையில் வளர்ச்சி காணப்படும். உங்களிடம் எதிர்காலத்தைப் பற்றிய பரந்த நோக்கு காணப்படும். உங்கள் இலக்குகளில் வெற்றி அடைய கடினமாக உழைப்பீர்கள். உங்கள் வழியில் வரும் தடைகளை தகர்த்தெறிவீர்கள்.

நீங்கள் பலனை அதிகம் எதிர்பார்க்காமல் பணியாற்றுவீர்கள். இதனால் குறித்த நேரத்தில் பணிகளை ஆற்றுவீர்கள். மேலதிகாரிகளின் பாராட்டையும் ஆதரவையும் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையாகவும் விசுவாசமாகவும் இருப்பீர்கள். இதனால் இருவரும் நல்ல உறவை பராமரிப்பீர்கள்.

பணப்புழக்கம் அதிகமாக காணப்படும். வங்கியிருப்பு உங்களுக்கு சாதகமான வகையில் பராமரிப்பீர்கள்.




இன்று சுமுகமான பலன்கள் காணப்படும். உங்கள் லட்சியங்களை அடைய இந்நாளை பயன்படுத்திக் கொள்ளலாம். இன்று உங்கள் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் உறுதியானது. இன்று நீங்கள் முக்கிய முடிவுகள் எடுக்கலாம்.

உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள். உங்கள் பணிக்கு மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையிடம் நம்பிக்கை உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவருக்கும் இடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று பணப்புழக்கம் சீராக இருக்கும். இன்று நிதி வளர்ச்சிக்கு உங்கள் ஆற்றலை பயன்படுத்திக் கொள்ளலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 04.09.2024




இன்று எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் இன்றைய நாள் சிறப்பாக இருக்கும். புதிய மனிதர்களின் தொடர்பும் அதனால் நல்ல பயனும் கிடைக்கும். இதனால் உங்கள் தொடர்பு வட்டம் விரிவடையும். வாழ்க்கை உங்களுக்கு கவர்ச்சிகரமாக இருக்கும்.

கூடுதல் பணிகள் காரணமாக இன்று நீங்கள் பணியில் மும்மரமாக இருப்பீர்கள். பணிகள் அதிகமாக இருக்கும். அவைகளை திறமையாக கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடும் விவாதங்களும் காணப்படும். இரவரும் நட்பு முறையோடு பழகுவீர்கள்.

நிதியைப் பொறுத்தவரை இன்று சுமாரான நாள். பண வரவிற்கும் சேமிப்பிற்கும் அதிர்ஷ்டம் குறைவான நாள்.




இன்று மகிழ்ச்சி அலை வீசும். முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலன்களைத் தரும்.

உங்களின் தனித்தன்மைக்கான பாராட்டைப் பெறுவீர்கள். உங்கள் கீழ் பணிபுரிபவர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்களின் தகவல் பரிமாற்றம் மூலம் உங்கள் துணையுடன் நல்லுறவை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணப்புழக்கம் திருப்திகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு உயரும். புதிய முதலீடுகளுக்கு திட்டமிடலாம்.

இன்று நல்ல ஆரோக்கியம் காணப்படும். உங்களிடம் உறுதியும் ஆற்றலும் நிறைந்திருக்கும்.




இன்று காணப்படும் கடினமான சூழல் காரணமாக தன்னம்பிக்கை குறைந்து காணப்படும். நம்பிக்கையை வளர்த்துக் கொள்வதன் மூலம் இந்தச் சூழ்நிலைகளை ஜெயிக்கலாம். பிரார்த்தனை நல்ல பலன் தரும்.

பணிகளைக் குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. பணியில் தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்களின் குழப்பமான மன உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்த எண்ணுவீர்கள். இருவரும் சமமாகப் பழக மகிழ்ச்சியாக நட்புடன் பழக வேண்டும்.

இன்று பண இழப்பு ஏற்படலாம். உங்களின் பிரியமான ஒருவரின் உடல் நிலைக்காக பணம் செலவு செய்ய நேரும்.

தோல் சம்பந்தமான ஒவ்வாமை காணப்படும்.




இன்று விரும்பிய பலன்கள் கிடைக்கும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். உங்களுக்கு சாதகமான பலன் கிடைக்கும் வகையில் பயனுள்ள திட்டங்களை தீட்டுங்கள்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். பல நன்மைகளை அடைவதற்கான சாத்தியம் உள்ளது. கூடுதல் ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

உங்கள் நெருங்கிய நண்பர் ஒருவரின் திருமண விழாவில் இருவரும் கலந்து கொண்டு மகிழ்வீர்கள். இது உங்களின் வாழ்க்கைத் துணைக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

பண வரவு சாதகமாக உள்ளது. உங்களின் சேமிக்கும் ஆற்றல் உயரும், இதனால் பொருளாதார பாதுகாப்பு காணப்படும்.



Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
- No.06, 19th Lane, Colombo 03.
- No. 15A, Layards Rd, Colombo 04.
- No.30, Hotel Road, Mount Lavinia.
- No. 02, Glenfall Road, Nuwara Eliya.
- No.01, Havelock Place, Colombo 05.
- No. 34/2, De Saram Road, Mount Lavinia.
- No. 358, High Level Road, Nugegoda.
- No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean GROUP OF COMPANIES | KELSEY HOMES 40 Years Housing Excellence

+94 777 546 546 | +94 770 774 774

LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA | No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

Northern PC Park

வடக்கின் கணினிப்பூங்கா



கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co | www.pcpark.co

Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park